2017 மார்ச் 30
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 30 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 052

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017







## தாமதம் வேண்டாம் களம் குதியுங்கள்
04

## மே 19 இல் 2 ஆவது ஜனாதிபதி விளையாட்டு விருது
12

## கைகோர்க்கும் ஜோர்தான் – சவூதி; 15 ஒப்பந்தங்கள் கைச்சாத்து
10



ஜனாதிபதி பிரகடனத்துக்கு

# வலுக்கிறது எதிர்ப்பு

## முசலியில் சுழற்சி முறை போராட்டம்

## வெள்ளியன்று பாரிய ஆர்ப்பாட்டம்

## மேலும் ஒரு சரணாலயத்திற்கு முஸ்தீபு

■ சுஐப் எம்.காசிம்

மன்னார் முசலிப் பிரதேசத்தை பாதுகாப்பு வனப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதனை வாபஸ் பெறக் கூறி மன்னார் பிரதேச முஸ்லிம்கள், பிரதேச மக்கள் ஆரம்பித்த சுழற்சி முறை போராட்டத்துக்கு நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு அதிகரித்து வருகிறது.

கரடிக்குழி, மறிச்சுக்கட்டி, பாலைக்குழி மக்கள் இரண்டாவது நாளாக நேற்று உண்ணாவிரதத்திற்கு சிலாபத்துறை வர்த்தக சங்க கொண்டச்சி பள்ளிவாசல் நிர்வாகம் உட்பட முசலிப் பிரதேசத்திலுள்ள சகல பள்ளிவாசல்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. பிரதேச சிவில் செயற்பாட்டாளரான முஜீப் ரஹ்மான் தெரிவித்தார்

குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலை வாபஸ் பெறக் கோரி முன்னெடுத்துள்ள

11 »»»»

## சு.க.வின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரி



### மேல் மாகாண முதலமைச்சர் சூசகம்

■ எம்.எஸ்.எம். முன்தஸீர்

2020இல் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எமது

11 »»»»

## பாலமுனை மு.கா. அமைப்பாளராக ரவூப் ஹக்கீம்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை அமைப்பாளராக கட்சித் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

செவ்வாயன்று கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீல.மு.கா. உயர்பீடக் கூட்டத்தின் போது கட்சியின் பாலமுனை அமைப்பாளர் முஹம்மத் அன்சில் இடைநிறுத்தப்பட்டதனையடுத்து

11 »»»»



## ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தை பாராளுமன்ற ஒப்புதலுடன் கைச்சாத்திடவும்

### அநுர குமார வலியுறுத்து

■ அ.அருண் பிரசாந்த்

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கும் ஒப்பந்தத்தை பாராளுமன்றின் அங்கீகாரத்துடன் தான் அரசு கைச்சாத்திட வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாவும் ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதால்

11 »»»»

## பிள்ளைப்பேற்றை ஊக்குவிக்க அமைச்சர் நியமனம்



ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயின் சுமார் ஐந்து லட்சம் சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட செல்வ செழிப்பு மிக்க ஒரு நாடாக விளங்கி வருகிறது. கடந்த 2015ஆம் ஆண்டு இங்கு எடுக்கப்பட்ட தேசிய அளவிலான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாடு முழுவதும் 4 கோடியே 64 லட்சத்து 23 ஆயிரத்து 64 பேர் வாழ்ந்து வருவதாக தெரியவந்துள்ளது.

முந்தைய ஆண்டுகளில் எப்போதும் இல்லாதவாறு கிடுகிடுவென சரிந்துள்ள நாட்டின்

11 »»»»

## மு.கா. தவிசாளராக முழக்கம் மஜீத்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வடக்கு - கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவருமான முழக்கம் அப்துல் மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கட்சி உயர்பீடக் கூட்டத்தில் இந்த நியமனம் செய்யப்பட்டது.

1986இல் முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது முதல் கட்சியில் இணைந்த இவர், முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின்

11 »»»»

## தேசிய வைத்தியசாலையில் விமல் வீரவன்ச

■ அ.அருண் பிரசாந்த்



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் ஒருங்கிணைந்த எதிரணியின் பாராளுமன்ற

11 »»»»

## நாட்டை பிளவுபடுத்தாது அதிகாரப்பகிர்வு

### பிரதமர் ரணில்




■ அ.அருண் பிரசாந்த்

நாட்டை பிளவு படுத்தாத வகையில் அதிகாரப் பகிர்வினை மேற்கொண்டு சகல மக்களும்

11 »»»»

## கிழக்கு ஆசிரியர்; வெற்றிட ஆவணங்கள் திறைசேரிக்கு ஒப்படைப்பு



கிழக்கின் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் உட்பட ஏனைய வெற்றிடங்கள் அடங்கிய சகல ஆவணங்களும் திறைசேரி மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன் போது இதில் கிழக்கு மாகாணத்தில் உள்ள 37 கல்வி வலயங்களுக்குமான வெற்றிடங்களை உள்ளடக்கி அவற்றின் தரவுகளை தொகுத்து ஆவணமாக இவை நேற்று பிற்பகல் திறைசேரியில் கையளிக்கப்பட்டதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ ஏ. நிசாம் தெரிவித்தார்,

அத்துடன் இதன் போது மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியதாக ஆயிரம் பக்கங்களை உள்ளடக்கிய மூன்று புத்தகங்கள் உள்ளடக்கப்பட்டதுடன் அவற்றில் வெற்றிடங்களை

11 »»»»

## ஊடகவியலாளர் நிவாரண சிபாரிசுக்கு அமைச்சரவை உபகுழு



2005 முதல் 2015ஆம் ஆண்டு வரை பாதிப்புக்குள்ளான ஊடகவியலாளருக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக சிபாரிசுகளைச் செய்வதற்கு அமைச்சரவை

11 »»»»

### இந்தியாவின் இறுக்கமான நிலைப்பாட்டாலே

# இலங்கையில் ஆட்சி மாற்றம்

### கோத்தாபய ராஜபக்ஷ அதிரடி



இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் சீனா தொடர்பான இறுக்கமான நிலைப்பாடு தான், 2015இல் ஸ்ரீலங்காவில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இந்தியாவைப் பணியாற்றச் செய்தது என்று ஸ்ரீலங்காவின் முன்னாள் பாதுகாப்புச்

11 »»»»

# சமூக நல்லிணக்கத்துக்கு தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம்

## பொலன்னறுவை மாவட்ட ஜம்மியத்துல் உலமா கோரிக்கை

(ஓட்டமாவடி எச்.எம்.எம்.பர்ஸான்)

பல்லின சமூகம் வாழும் பொலன்னறுவை மாவட்டத்தில் சமூக நல்லிணக்கத்துக்கு தீங்கு விளைவிக்கும் இஸ்லாம் விரும்பாத செயற்பாடுகளில் மாவட்ட முஸ்லிம்கள் ஈடுபடக்கூடாது என ஜம்மியத்துல் உலமா கோரிக்கை விடுத்துள்ளது.

பொலன்னறுவை மாவட்ட ஜம்மியதுல் உலமாவினால் தம்பாளை தஃவா நலன்புரி அமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற இஸ்லாமிய கருத்தரங்கில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந் நிகழ்வின் இறுதியில் முக்கியமான பத்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அவை பின்வருமாறு, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொலன்னறுவை மாவட்டக் கிளை அவ்வப்போது வழங்கும் வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி நிருவாகங்களும் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென இம்மாநாடு அனைத்து பள்ளி நிருவாகங்களையும் கேட்டுக்கொள்கிறது. 2 அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் ஏற்றுக்கொள்ளப்படாத வழிகெட்ட பிரிவுகள் மாவட்டத்திலுள்ள பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள், பாடசாலைகள் போன்றவைகளில் மார்க்க நிகழ்ச்சிகளை செய்வதற்கு இடமளிக்கக்க் கூடாது.3 அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் ஏற்றுக்கொள்ளப்படாத வழிகெட்ட பிரிவினர்களை பள்ளிவாயல்கள் மற்றும் மத்ரஸாக்களில் நிருவாகிகளாகவோ கதீப்மார்களாகவோ ஆசிரியர்களாகவோ நியமிக்கப்படக்கூடாது என இம்மாநாடு கேட்டுக்கொள்வதோடு இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைக்கு முரணான காதியானி, ஷீஆ, அத்வைதம் போன்ற கொள்கையுடையவர்களை பள்ளி நிருவாகங்களில் சேர்த்துக்கொள்ளக் கூடாது எனவும் இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

4 பல்லின சமூகம் வாழும் இம்மாவட்டத்தில் சமூக நல்லிணக்கத்திற்கு தீங்கு விளைவிக்கும் இஸ்லாம் விரும்பாத செயற்பாடுகளில் முஸ்லிம்கள் ஈடுபடக்கூடாது எனவும் இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது. 5 வட்டி, விபச்சாரம், மது அருந்துதல், களவு, சூதாட்டம், தாயத்துக்கட்டுதல், குறி பார்த்தல், பால் பார்த்தல், வங்கிகளுடனான வட்டித் தொடர்புகள், ஊர்களுக்குள் ஊடுருவி இருக்கும் தவணை அடிப்படையிலான வட்டிக் கடன்கள் போன்ற ஹராமான விடயங்களில் இருந்து ஊர்மக்களை பாதுகாப்பதும் தீனை நிலைநாட்டுவதும் பள்ளி நிருவாகிகளின் தலையாய கடமை என்பதனை இம்மாநாடு வலியுறுத்துகிறது.



6 அல் குர்ஆன், ஆதாரபூர்வமான சுன்னாக்களின் அடிப்படையில் போதனைகள் செய்யும் பள்ளிவாசல்களில் பணிபுரியும் அல்லது விஷேட பயான்களுக்கு அழைக்கப்படும் உலமாக்களை பள்ளிவாயல்களைவிட்டும் இடை நிறுத்தாமல் இருக்கவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.7 முஸ்லிம் சமுகத்தில் ஏற்படும் சமயரீதியான பிரச்சினைகளுக்கு உலமா சபையினால் வழங்கப்படும் தீர்வுகளை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

8 ஒரு மௌலவி குத்பாப் பிரசங்கம் நிகழ்த்தும் போது அல்லது விஷேட பயான் நடாத்தும் போது மார்க்கம் சம்பந்தமான ஏதாவது கருத்துக்களை சொன்னால் அதனை பொதுமக்கள் ஒரு பிரச்சினையாக எடுக்காமல் அதற்கான தீர்வை உலமா சபையினிடம் ஒப்படைத்து தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது. 9 வக்பு சொத்துக்களை பராமரிக்கின்ற, உலமாக்களை நிர்வகிக்கின்ற விடயங்களிலும் இஸ்லாமிய சட்டதிட்டங்களையும், வழிகாட்டல்களையும் கடைப்பிடிக்குமாறு வேண்டிக்கொள்கிறது.10 இதுவரை வக்பு சபையில் பதிவு செய்யப்படாத தமது நிர்வாகத்தின் கீழ் இருக்கும் பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள், பொதுச் சொத்துக்கள் ஆகியவற்றை எமது நாட்டின் வக்பு சட்டத்தின் பிரகாரம் வக்பு சபையில் உடனடியாக பதிவு செய்யுமாறு இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

ஆகிய தீர்மானங்கள் சபையோர் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது.

## வரட்சி காலநிலையால் வெலிகமவில் பரவும் நோய்கள்

(வெலிகம நிருபர்)

தற்போது நிலவி வரும் வரட்சியுடனான காலநிலையால், வெலிகம பகுதியில் பல்வேறு நோய்கள் பரவி வருகின்றதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கண்நோய், வைரஸ் காய்ச்சல், உடல் வலி போன்ற நோய்கள் பரவி வருகின்றது. சிறுவர் முதல் முதியோர் வரை இந் நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமானால் அண்மையிலுள்ள வைத்திய சாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு பொது மக்கள் வேண்டப்படுகின்றனர்.

சுமார் ஏழு நாட்களுக்கு இந் நோய் நீடிக்குமென தெரிவிக்கப்படுகின்றது. கொதித்தாறிய நீரைப் பருகுமாறும், சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் பொது மக்களை சுகாதார அதிகாரிகள் வேண்டிக்கொள்கின்றனர்.

## வடக்கில் 4000 ஏக்கர் காணி விரைவில் விடுவிப்பு



(யாழ்.பாறுக் ஷிஹான்)

வடக்கில் மேலும் 4000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரியாவிடை நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தனது கருத்தில் யாழ்.மாவட்டத்தில் பாதுகாப்பு படைத் தலைமையகத்தினால் 20,000 ஏக்கர் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 2000 ஏக்கர் காணிகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன. விரைவில் மேலும் 4000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. அந்தவகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாழ். மாவட்டத்தின் காங்கேசன் துறைமுகப் பகுதியின் சில இடங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பாதுகாப்பு படையினர் மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் காணிகளை வழங்கி, நம்பகரமான செயற்திட்டத்தினை முன்னெடுத்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையக கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க, இராணுவ தலைமைப்பீட உயர் அதிகாரியாக பதவி உயர்வு பெற்று செல்வதுடன், கிழக்கு மாகாண கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, வடக்கு மாகாணத்திற்கான கட்டளைத்தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரநாயக்க திப்பிட்டிய, மு.வி. மாணவி 9ஏ சித்தி



அரநாயக்க திப்பிடிய முஸ்லிம் வித்தியாலய மாணவி எம்.எப்.பாத்திமா ரஹீமா இம்முறை வெளிவந்த கல்விப்பொதுதராதர சாதாரணதர ஆங்கில மொழிமூல பரீட்சையில் 9ஏ சித்திகளைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.தனது ஊருக்கு வரலாற்று சாதனைப் படைத்துள்ள இவர் வில்பொல மொஹம்மட் பாஹிம் சித்தி ருகய்யா தம்பதினரின் புதல்வி ஆவார்.

(அரநாயக்க விஷேட நிருபர் பாரா தாஹீர்)

## ஓய்வு பெற்றார்

(உக்குவளை நிருபர் ஜலீல்)

மாத்தளை தெற்கு பகுதி முஸ்லிம் விவாகப்பதிவாளராகக் கடந்த 22 வருடங்களாகப்பணி புரிந்து வந்த மாத்தளையைச் சேர்ந்த என்.பி.ஏ. சக்கூர் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.



உக்குவளை குரீவெல ஹமீதியா கல்லூரி மாத்தளை சாஹிரா கல்லூரிகளில் கல்வி கற்றுள்ளார். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியராக பல பாடசாலைகளில் 30 வருடமாக பணிபுரிந்துள்ள இவர் 1969 இல் யாழ். இடைக்காடுவில் அகில இலங்கை ரீதியில் சியவச நூலகர் பயிற்சிப்பட்டறையில் தெரிவாகி நூலகப் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றார். 1985 இல் அமெரிக்க ஹவாய் தீவு கடற்படைகள் தன நுன் நூலகராகவும் பின்பு சவூதி அரேபிய கிங்காலித் இராணுவ தள நுன் நுலகப்பிரிவு அசையா சொத்து அச்சுப்பகுதி உயரதிகாரியாகவும் பணிபுரிந்துள்ளார். இவரது சேவைக்காக அகில இலங்கை இன நல்லுறவு ஒன்றியம் சாமஸ்ரீ, தேசமான்ய ஆகிய கௌரவ பட்டங்களை வழங்கியது.

மாத்தளை கொங்காவல வீதி முஸ்லிம் வாசிகசாலை சங்க முன்னாள் தலைவரும் மாத்தளை மாவட்ட அஹதிய்யா பாடசாலை ஆரம்ப முக்கிய ஸ்தபாகருமான இவர் உக்குவளை மாருகொனயைச் சேர்ந்த மர்ஹூம் நாகூர் பிச்சை தம்பதிகளின் புதல்வராவார்.


**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

**உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர்** M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P:0772810009.WhatsApp:0779697790 Email - nrahmathullah786@yahoo.com


## முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கொழும்பு மாவட்ட புனரமைப்பு கூட்டம்

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் கொழும்பு மாவட்ட சம்மேளன புனரமைப்புக் கூட்டம் ஏப்ரல் 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணியளவில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி பீ.எம் பாருக் தலைமையில் மட்டக்குளியில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கிர் மாகார், போஷகரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம் அஸ்வர் பொதுச் செயலாளர் எம்.அஜிவதீன், பொருளாளர் எம்.நபீல், ஆகியோர் உட்பட சம்மேளனத்தின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்வார்கள்.

இக் கூட்டத்துக்கு கொழும்பு மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இக் கூட்டத்தை அஸீஸ் பாய் உள்ளிட்ட ஏற்பாட்டுக் குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

## அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் 98 சதவீதம் உயர்தரத்திற்கு தகுதி



(அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

இம்முறை வெளியான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் மூன்று மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர் என கல்லூரியின் அதிபர் ஏ.எல்.கமறுதீன் தெரிவித்தார்.

இப்பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் 98 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர் தர பிரிவில் கல்வி கற்க தகுதி பெற்றுள்ளனர்.

இதற்கமைவாக இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய எப்.ஹப்லல், எம்.எஸ்.சக்கி மற்றும் எம்.எச்.சியாறா ஆகிய மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இது தவிர இப்பரீட்சைக்குத் தோற்றிய 10 மாணவர்கள் 8 ஏ, பி சித்தியினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளனர். அத்துடன் இப்பரீட்சைக்குத் தோற்றிய அதிகப்படியான மாணவர்கள் பல பாடங்களிலும் நூறு வீத சித்தியினைப் பெற்றுள்ளதுடன் உயர்தர வகுப்புகளில் கணித மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளில் கல்வி கற்க அதிமான மாணவர்கள் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் போன்றோருக்கு தமது நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக அதிபர் கமறுதீன் மேலும் தெரிவித்தார்.

இம்முறை வெளியான க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்தி மற்றும் 8 ஏ பி சித்தி பெற்ற மாணவர்களுடன் கல்லூரியின் அதிபர் ஏ.எல்.கமறுதீன், பிரதி அதிபர்களான எஸ்.எல்.எம்.நசீர், எம்.ஐ.நூர்தீன், எம்.ரி.சியாத் மற்றும் வலயத் தலைவர் சி.மதியழகன், உதவி வலயத் தலைவர் எம்.வை.எம்.கதாபி ஆகியோரையும் படங்களில் காணலாம்.

## பத்தனை தீ விபத்தில் 18 வீடுகள் நாசம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சென். கிளயார் தோட்ட டெவோன் பிரிவு தோட்ட குடியிருப்பில் நேற்று அதிகாலை 5 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 18 வீடுகள் கொண்ட தொடர் லயக்குடியிருப்பில் மூன்று வீட்டிற்குள் ஏற்பட்ட தீயினால் ஒரு வீடு முற்றாகவும், ஏனைய இரண்டு வீடுகள் பகுதியளவிலும் எரிந்துள்ளது.

இந்த வீடுகளில் குடியிருந்த 03 குடும்பங்களை சேர்ந்த 17 பேர் தற்காலிகமாக அயலவர்களின் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தீ ஏற்பட்ட போது வீட்டில் யாரும் இருக்கவில்லை. எனினும் அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

இதேவேளை இது தொடர்பாக திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையத்திற்கு பிரதேச வாசிகளால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தொழுகை நேரங்கள்

30.03.2017

| சுபஹ் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 4.56 | 12.17 | 3.25 | 6.21 | 7.30 |

கிழக்குமாகாணம் 6 நிமிடங்கள் கழித்து கணிப்பிடவும்

## அட்டாளைச்சேனை அந்நூர் வித்தியாலய அதிபருக்கு பாராட்டு





(றியாஸ் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலயத்தில் இம்முறை வெளியான க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேற்றின் பிரகாரம் தோற்றிய 32 மாணவர்களும் சித்தியடைந்தனர். இதில் எம்.ஆர்.எப்.நஷ்கா மற்றும் எம்.முபாஹித் ஆகியோர் தலா 8ஏ,1பீ பெறுபேற்றைப் பெற்றனர். நேற்று அட்டாளைச்சேனை முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் தமீம் ஆப்தீன் உள்ளிட்ட பழைய மாணவர்கள் பாடசாலையின் அதிபர் எம்.ஏ.மிஸ்வருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

கே.ஏ.அமீர்,ஏ.எம்.அக்பர் தலைமையில் மாணவர்களுக்கு குளிர்பானம் வழங்கினர். சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல்.மன்சூரும் கலந்துகொண்டார்.


1717 FOLLOW US www.mobitel.lk
CASH BONANZA
2017 MONTERO அதிர்ஷ்ட சலுகை
- SEASON 2-
2016 ஆம் ஆண்டின் வெற்றியாளர்கள்
அம்பலந்தொட்ட
ஷானிகா ஸ்ரீமாலி
பல்கலைக்கழக மாணவி
எனது அண்ணன் செய்த ரீலோடினால் மொபிடெல் வெற்றியாளர் ஆனேன். அவரின் பகல் போசனத்திற்கான பணத்தைத் தான் ரீலோட் செய்திருந்தார். எனது எதிர்கால பயணத்தை தெளிவாக்கியது மொபிடெல். இது எனக்கு கிட்டியது மிகப் பெரிய அதிஷ்டம்.
வாரியபொல
ஜே.எம். துஷாந்த ஜயலத்
வர்த்தகர்
பொருளாதாரரீதியில் மிகவும் சிரமப்பட்டேன். எமது பெறுமதிகள் அனைத்தையும் மொபிடெல் பரிசாக வழங்கியது. மகிழ்ச்சி என்பதன் அதியுச்சத்தை அனுபவிக்கிறேன். அவ்வாறே மொபிடெல் நிறுவனத்தின் இந்த முயற்சியும் மகிழ்ச்சி தருகின்றது.
படல்கும்புர
ஆர்.எம். ரோஷான் பிரியதர்ஷன
விவசாயி
மொபிடெல் கேஷ் போனான்ஸா எம்மை போன்ற பின்தங்கிய பிரதேசத்தில் உள்ளவர்களுக்கும் வெற்றி வாய்ப்புகளை வழங்கும் நிகழ்ச்சியாகும். ஒருவரின் முன்னேற்றத்திற்கு மொபிடெல் கேஷ் போனான்ஸா ஊடாக மிகப் பெரிய பங்களிப்பு கிட்டுகின்றது.
நிட்டம்புவ
ஆர்.எம்.பி.ஜி.ஜி. குமாரி
ஆசிரியை
சொல்ல முடியாத அளவு ஆனந்தம் கொண்டேன். வாழ்க்கையில் எப்பொழுதும் இவ்வாறான ஒரு வாகனத்தை எம்மால் சொந்தமாக பெற முடியாது. மொபிடெல் எமக்கு வழங்கிய மிகப்பெரிய கௌரவமே இதுவாகும்.
தனமல்வில
பீ.ஏ. குசுமாவதி
ஆசிரியை
மொபிடெல் கேஷ் போனான்ஸா ஒருவருக்கு மாத்திரம் வெற்றியல்ல. ஓர் குடும்பத்தில் அனைவரையும் வெற்றியை நோக்கி கொண்டு செல்லும் நிகழ்ச்சியாகும். மொபிடெல் நிறுவனம் தினமும் மிகச் சிறப்பாக மேலும் மிளிர வேண்டும்.
பதவி ஸ்ரீ திஸ்ஸபுர
ஆர்.டி.என். ஜயசிங்க
ஊர்காவற்படை வீரர்
எனது மனைவியும், புதல்வியும் செவிபுலன் சக்தியற்றவர்கள். நாம் வாழ்ந்தது வாடகை வீட்டில். மொபிடெல் எமக்கு தெய்வ வரமாக அமைந்தது. எனது வாழ்க்கையின் பலம் மொபிடெல். மொபிடெல் நிறுவனத்திற்கு நான் உளமாற வாழ்த்து தெரிவிக்கிறேன்.
களுத்துறை
விஜித ரொட்ரிகோ
முன்னாள் பாதுகாப்பு ஊழியர்
மிகவும் மகிழ்ச்சியாகும். எனது சிறிய வாழ்க்கையை தலைகீழாக மாற்றியது மொபிடெல் ஆகும். கரடுமுரடாக இருந்த எனது வாழ்க்கை சமநிலைப்படுத்தியது மொபிடெல். மொபிடெல் இணைப்புடன் நீங்களும் இணைந்திருங்கள்.
எப்பாவல
எச்.ஜே.எஸ்.எஸ். செனவிரத்ன
வியாபாரி
வர்த்தகராக திகழ்வதற்கு கனவு கூட கண்டிராத என்னை வர்த்தகராக மாற்றியது மொபிடெல். இன்று என்னிடம் 10 பேர் தொழில்புரிகின்றனர். அவர்களது வாழ்வாதாரத்திற்கும் வழியேற்படுத்தியது மொபிடெல்.
திருகோணமலை
ஆர். அற்புதராஜா
முன்னாள் பாதுகாப்பு ஊழியர்
நான் வாடகை இல்லத்தில் வசிக்கும் போதே மொபிடெல் கேஷ் போனான்ஸா வெற்றி கிட்டியது. திருகோணமலையில் சொந்த இல்லம் ஒன்றை கொள்வனவு செய்தேன். இனி எதிர்காலம் பற்றிய கவலையில்லை. மொபிடெல் உண்மையில் நம்பிக்கை வைக்கக்கூடிய நிறுவனமாகும்.
கண்டி
ஆர்.எம்.பி.கே. இரத்நாயக்க
கணக்கு இலிகிதர்
மொபிடெல் இடமிருந்து கிடைத்த இந்த பரிசால் வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. மொன்டேரோ வாகனத்தை செலுத்துவது நீண்டநாள் கனவு அந்த கனவை மொபிடெல் நனவாக்கியது. எமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை வார்த்தைகளில் கூறமுடியாது.
பிங்கிரிய
ஏ.எல். சத்குமார
வியாபாரி
என்றும் நினைத்திறாத ஒன்றே நிகழ்ந்தது. நான் மொபிடெல் உடன் இணைந்து 11 வருடங்கள் ஆகின்றது. அந்த நம்பிக்கையை நான் இதன் பிறகும் தொடர்வேன். மொபிடெல் வாழ்க்கையின் ஒரு பாகமாக நான் தற்போது உணர்கிறேன்.
தெஹிவளை
ஜி. அரியரத்னம்
ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி
சகல தருணங்களிலும் நான் மொபிடெல்லை நம்பினேன். ஒருநாள் நான் வெல்வேன் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. அதுபோல் 2017ம் ஆண்டை அதிஷ்டமிக்க ஆண்டாக என்னால் ஆரம்பிக்க முடிந்தது. நீங்களும் அதிஷ்டசாலியாகும் வாய்ப்பு உள்ளது.
TRC/CT/03/01/01/MOB/15-27 WP/GT/4738
12 ஜீப்கள் உட்பட ரூ. மில்லியன் 350
MONTERO
மாபெரும் கொடுப்பனவு
2017 ஆம் ஆண்டில் இலட்சோபலட்ச வெற்றியாளர்களுள் நீங்களும் வெற்றியாளர் ஆகுங்கள்!
ஒவ்வொரு 50 ரூபாவிற்குமான ரீலோட் அல்லது பில் கொடுப்பனவிற்கும் ஒரு வெற்றி வாய்ப்பு!
(முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு மற்றும் இன்டர்நெட் பெக்கேஜ்கள்) *நிபந்தனைகள் உண்டு
Sri Lanka Telecom Mobitel
உங்களுடனே. என்றும்.

NAVAMANI DAILY
நவமணி
**FREELANKA MEDIA LTD.**
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
30TH MARCH 2017 - THURSDAY

# ஜீ.ஸீ.ஈ பரீட்சையில் தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் முன்னிலையில் இல்லாதது ஏன்?

2016ஆம்ஆண்டு நடைபெற்ற ஜீ.ஸீ.ஈ சாதாரண தரப்பரீட்சை முடிவுகளின்படி நாட்டில் 8224 பேர் ஒன்பது ஏ சித்திபெற்றுள்ளனர்.

பரீட்சை வரலாற்றில் இவ்வளவு கூடுதலான பேர் சித்திபெற்ற முதற் சந்தர்ப்பம் இதுவாகுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம். என். ஜே புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

2015இல் நடைபெற்ற பரீட்சையில் 6012பேர் 9 ஏ சித்தி பெற்றிருந்தார்கள். கடந்த ஆண்டினை விட இம்முறை 2122 பேர் கூடுதலாக 9 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

2012இல் 4509 பேரும் 2013இல் 5737 பேரும் 2014இல் 5721பேரும் 9 ஏ சித்தி பெற்று சித்தியடைந்துள்ளனர். கடந்த நான்கு வருடங்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது இம்முறை அடைந்துள்ள முன்னேற்றம் சாதனைக்குரியதே என்று குறிப்பிடலாம்.

வெளியான பரீட்சை முடிவுகளின் படி பார்க்கும் போது நாட்டின் கல்வித்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது.

நாட்டின் முதல் பத்து இடங்களையும் பெற்ற மாணவர்கள் நகர்ப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். முதல்பத்து இடங்களில் தெரிவாகியுள்ள கொழும்புக்கு வெளியே உள்ளவர்களும் அந்தந்த நகரங்களிலுள்ள பிரதான பாடசாலைகளிலிருந்தே தெரிவாகியுள்ளனர்.

பரீட்சையில் தெரிவான முதல் 10 பேரில் ஐந்தாம் இடத்துக்கு ஒரேயொரு தமிழ் மாணவர் தெரிவாகியுள்ளார். ஏனைய எல்லோரும் சிங்கள மொழி மூலம் தெரிவானவர்களாவர்.

ஒப்பீட்டளவில் நோக்கும் போது தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் கல்வித்தரம் இன்றும் பின்னேற்றகரமான நிலையிலிருப்பதனையே இது உணர்த்துகின்றது.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் இன்றும் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. போதிய வளங்களில்லாமையும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு தடையாகவே உள்ளது.

முதல் பத்துப்பேரில் ஒரு முஸ்லிம் மாணவரேனும் இல்லாமையை இங்கு குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

ஒப்பீட்டளவில் பார்க்கும் போது இதற்கு முன்னைய ஆண்டுகளை விட தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் பெறுபேறுகளில் ஓரளவு முன்னேற்றம் இருப்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மொழி ரீதியாக நிலவும் குறைபாடுகள் குறித்து கல்வி அமைச்சு கூடுதலான கவனம் செலுத்தி தமிழ் மொழி மூலமும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்குத் தடையாக உள்ள காரணிகளை களைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



# தாமதம் வேண்டாம் களம் குதியுங்கள்

**ஜனாதிபதியின் புதிய வில்பத்து பிரகடனம் தொடர்பில் சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கை**

**எஸ்.அஷ்ரப்கான்**

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனியும் தாமதிக்காது களத்தில் இறங்கி மறிச்சுக்கட்டி, கரடிக்குளி முஸ்லிம்களின் காணிகளைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

வடபுல முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்த காலமது. விடுதலைப் போராட்டம் வடக்கில் வெடித்தபோது அன்று போராடிய சொந்த சமூகத்திற்குள்ளே இருந்து எத்தனையோ காட்டிக் கொடுப்புகளும் கழுத்தறுப்புகளும் இடம்பெற்றன. ஆனாலும் இதில் எதிலும் வடபுல முஸ்லிம்கள் ஈடுபடவில்லை. இஸ்லாம் சொன்ன அமைதி வாழ்க்கைக்கு அணிகலனாக அவர்கள் திகழ்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் கலிமாச் சொன்ன ஒரே காரணத்திற்காக அவர்கள் வாழையடி வாழையாக வாழ்ந்த பூமியில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

சொத்துக்களை இழந்தார்கள், சுகத்தை இழந்தார்கள், அனைத்தையும் இழந்தார்கள். அவர்கள் இழப்பதற்கு பாக்கி இருந்தது 'இழப்பு' மட்டும் தான். 25 வருடங்கள் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை கல் நெஞ்சையும் கரையவைக்கும். என்றோ ஒரு நாள் தமக்கும் விடிவு வரும். தாம் பிறந்த மண்ணில், தாம் குவளைகளாக துள்ளி விளையாடிய மண்ணில், ஏர் பிடித்து நீரிறைத்து களனியைக் கதிராக்கிய மண்ணில் மீண்டும் கால் பதித்து நிம்மதிக் காற்றைச் சுவாசித்து அம்மண்ணில் மீண்டும் வாழும் நாள் மலராதா? என்று ஏங்கிய நாட்கள் எத்தனை.

ஒரு நாள் செய்தி வந்தது. இது ஆண்டு 2009. 'யுத்தம் நிறைவு பெற்றுவிட்டது, உங்கள் கனவுகள் நிஜமாகப் போகின்றன' என்பதுதான் அந்த செய்தி. அந்த செய்தி அம்மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்திய அந்த இன்ப சுகம் அடுத்த நாளே, அம்மண்ணில் கால் பதித்துவிட முடியாதா? உள் மனதில் ஏக்கம். 'இல்லையாம், துன்பம் அனுபவித்துப் பழகியவர்கள்தானே, சற்று பொறுத்திருங்கள். உடனடியாக அகதியானவர்களுக்கே முன்னுரிமை' என்றது அதிகாரத் துறை. ஏந்திய கனவுகளுக்கு தற்காலிக கலைவு.

ஆண்டுகள் இரண்டு, மூன்று உருண்டோடின. நத்தை வேகத்தில் ஏதோ நகர்வது தெரிந்தது. அது முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் என்றார்கள். மறுபுறம் வடக்கின் வசந்தம் வேகமாய் வீறுநடை போட்டது. அதன் வீரியம் வடக்கில் யுத்தம் ஒன்று நடைபெற்றதா? அது எப்போது? என்று மூக்கில் விரல் வைக்குமளவு இருந்தது?



நமது இரத்தங்களுக்கும் ஆசை அந்த வடக்கின் வசந்த மழையில் நனைந்துவிடவேண்டும்; தம்மண்ணில் நிம்மதியாக வாழ வேண்டுமென்று.

அந்தக் கனவும் கானலாகவே மாறிப்போனது. கலிமாச் சொன்ன ஒரே காரணத்திற்காக. வடக்கின் வசந்தம் நம் இரத்தங்களைக் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் வாழ்ந்த நிலங்கள் சில காடுகளாக மாறியிருந்தன. இன்னும் சிலவற்றில் புலிகளின் ஆதரவாளர்கள் அடாத்தாக குடியேறி இருந்தார்கள்.

சிலருக்கு மாற்றுக் காணிகள் கிடைத்தன, சிலருக்கு அதுவுமில்லை. சிலருக்கு வீடுகள் கிடைத்தன, பலருக்கு அதுவுமில்லை. கிடைத்த வீடுகளும் முஸ்லிம் நாடுகளின் பரோபகாரத்தால்தான் கிடைத்தன; என்றார்கள். அப்படியானால் நம்மவர்கள் இந்த நாட்டுப் பிரஜைகள் இல்லையா? நமது அரசு நம்மை ஏன் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடாத்த வேண்டும்? இவற்றைத் தட்டிக்கேட்க நமக்குத் திராணியில்லையா? தட்டிக்கேட்டதாக சொன்னார்கள் தமிழ் ஊடகங்களில். இவ்வாறு 'இல்லை, இல்லை' என்றபட்டியல் ஒரு புறம்

மறிச்சுக்கட்டி, கரடிக்குளி

மேற்படி பிரதேசங்கள் முஸ்லிம்கள் தொன்று தொட்டு வாழ்ந்த பிரதேசங்கள். நம் ரத்தங்களுக்கு பெரிய ஆறுதல். தாம் பரம்பரையாக வாழ்ந்த பூமியில் மீண்டும் வாழக் கிடைத்தது. பாவம், அவர்கள் வாழ்ந்த, மீண்டும் கனவுகளைச் சுமந்துகொண்டு வாழவந்த பூமி, வனப்பரிபாலன திணைக்களத்திற்கு சொந்தம் என்று திருட்டு வர்த்தமானி வெளியிட்டது; அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் என்ன செய்வார்கள் அப்பாவிகள். ஆனால் அவர்கள் அளித்த வாக்குகளுக்கும் அதுதெரியவில்லை.

இந்தப் பிரச்சினையின் இன்றைய யதார்த்த நிலை என்ன?

இந்த விடயத்தில் தயவு செய்து நடுநிலைக் கண்ணோட்டத்தைச் செலுத்துங்கள். குறித்த காணிகள் நம்மவர்களின் காணிகள்? அதற்கான ஆதாரங்கள், ஆவணங்கள் நம்மவர்களிடம் இருக்கின்றன. அந்தக் காணிகளை கபளீகரம் செய்கின்ற ஜனாதிபதியின் உத்தரவை எந்தக் காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கெதிராக போராட வேண்டியது; நம் ஒவ்வொருவரின் கடமையாகும். ஒரு நாணயத்திற்கு இரு பக்கம் இருக்கின்றது; அதில் ஒரு பக்கம் மேற்சொன்னது. அதன் மறுபக்கம் என்ன?

ஜனாதிபதியைப் பொறுத்தவரை குறித்த காணிகள் வனபரிபாலன திணைக்களத்திற்குரியவை. அந்தக் காணியில் ஒரு பகுதியில்தான் முஸ்லிம்கள் குடியேறி இருக்கின்றார்கள். அதே நேரம் அந்தக் காணியில் பல நூறு ஏக்கர்கள் சுத்தம் செய்யப்பட்டு சில அரசியல்வாதிகளின் தேவைக்காக பெறப்பட்டிருக்கின்றது; என்ற குற்றச்சாட்டு பலதரப்பாலும் முன்வைக்கப்படுகின்றது.

இந்நிலையில் எஞ்சியிருக்கின்ற காணிகளையாவது பாதுகாக்கக் கூடாதா? என்ற ஜனாதிபதியின் சிந்தனையை எந்த வகையில் பிழை காண்பது?

இன்றுவரை குறித்த காணிகள் முஸ்லிம்களின் பூர்வீகக் காணிகள் என்கின்ற விடயம் உரிய ஆவணங்களுடன் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏன் தெளிவுபடுத்தப் படவில்லை. போராடுகிறோம், போராடுகிறோம், என்று ஊடகங்களில் போராடத் தெரிந்தவர்களுக்கு ஏன் தீர்மானம் எடுக்கக் கூடிய நிலையில் உள்ள ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தெளிவுபடுத்தப்படவில்லை. அவ்வாறு தெளிவு படுத்தியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையாயின் அதற்கெதிராக அல்லவா போராட வேண்டும்.

எதற்கும் அவர்கள் மசியாவிட்டால், சேட்டை களட்டி வீசுவதுபோல் பதவியைத் தூக்கி வீசலாம், ஜெனீவாவுக்குப் போகலாம், ஜனாதிபதி அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்யலாம். இந்த போராட்டத்தையெல்லாம் ஊடகங்களில் தொடர்ந்து செய்து வருகின்றோம்; ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இது பொதுமக்களின் காணி என்று ஆதாரத்துடன் தெளிவுபடுத்தப்படவில்லை; எலிக்கு மரணம் பூனைக்கு விளையாட்டு, என்பார்கள். அதுபோல் சிலருக்கு அரசியல், ஆனால் முசலி மக்களோ தங்களது எதிர்காலத்தையே பறிகொடுத்த நிலை. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு வில்பத்து விஸ்தரிப்புத் தொடர்பாக ஜனாதிபதி ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அப்பொழுது ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடப்போவதாகவும் ஜெனீவாவுக்குப் போகப்போவதாகவும் அறிக்கைவிடத் தெரிந்தவர்களுக்கு அதற்குப்பிறகாவது ஜனாதிபதிக்கு இந்த விடயத்தை தெளிவுபடுத்தியிருக்கலாமே! ஏன் செய்யவில்லை?

இதற்குரிய தீர்வு என்ன?


இன்று 22 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். இந்த 22 பேருமோ அல்லது மனச்சாட்சியுள்ள ஒன்று சேரக்கூடியவர்கள் ஒன்று சேர்ந்து உரிய ஆவணங்களுடன் சென்று இது முஸ்லிம்கள் யுத்தத்திற்கு முதல் வாழ்ந்த காணி என்பதை ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் நிறுவுங்கள். அவ்வாறு நிறுவினால் குறித்த வர்த்தமானியை வாபஸ் வாங்கியே ஆக வேண்டும். அவ்வாறு நிறுவியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையாயின் அது துவேசத்தைத் தவிர வேறு இல்லை. எனவே அரசுக்கெதிரான மாற்று நடவடிக்கையைப் பற்றி யோசிக்க வேண்டும். இந்த அரசாங்கத்தை நடாத்துவதற்கு முஸ்லிம் பா. உறுப்பினர்கள் தேவை என்பதை மறந்துவிட வேண்டாம்.

எனவே இது தீர்க்க முடியாத பிரச்சினையில்லை. இதை இந்த சந்தர்ப்பத்தில் உங்களல் தீர்க்க முடியாவிட்டால் நீங்கள் முஸ்லிம் அரசியலுக்கே பொருத்தமற்றவர்கள். நாளை உங்கள் அனைவருக்கும் மௌத்து இருக்கின்றது. ஏற்கனவே வஞ்சிக்கப்பட்ட வடபுல மக்கள் நீங்களும் அவர்களை வஞ்சித்து விடாதீர்கள் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**இதற்குரிய தீர்வு என்ன?**
**இன்று 22 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். இந்த 22 பேருமோ அல்லது மனச்சாட்சியுள்ள ஒன்று சேரக்கூடியவர்கள் ஒன்று சேர்ந்து உரிய ஆவணங்களுடன் சென்று இது முஸ்லிம்கள் யுத்தத்திற்கு முதல் வாழ்ந்த காணி என்பதை ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் நிறுவுங்கள். அவ்வாறு நிறுவினால் குறித்த வர்த்தமானியை வாபஸ் வாங்கியே ஆக வேண்டும். அவ்வாறு நிறுவியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை யாயின் அது துவேசத்தைத் தவிர வேறு இல்லை. எனவே அரசுக்கெதிரான மாற்று நடவடிக்கையைப் பற்றி யோசிக்க வேண்டும். இந்த அரசாங்கத்தை நடாத்துவதற்கு முஸ்லிம் பா. உறுப்பினர்கள் தேவை என்பதை மறந்துவிட வேண்டாம்.**

# விரைவில் அரசுக்குள் வெடிப்பு ஏற்படும்

## முன்னாள் ஜனாதிபதி



இந்த அரசின் ஆயுள் மிகக் குறுகியது. அரசுக்குள் விரைவில் வெடிப்பு ஏற்படும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தங்காலையில் நடைபெற்ற பௌத்த சமய நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய மஹிந்த ராஜபக்ஷ கூறியதாவது,

இப்போது இந்த அரசின் பொருளாதார ஆலோசகராக இருக்கும் மத்திய வங்கியில் ஆளுநர் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்று டொலரின் இருப்பினை அதிகரிக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

நான் அவரின் கருத்தை ஏற்கமாட்டேன். இந்த நாட்டின் வளங்களை விற்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. ஆட்சியாளர்கள் என்போர் இந்நாட்டு சொத்துக்களின் பொறுப்பாளர்கள் மட்டுமே, எதிர்காலப் பரம்பிரையினருக்காக இந்த நாட்டில் சொத்துக்களைப் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும். அரசுக்கு முறையான வேலைத்திட்டம் ஒன்றில்லாததனால் கடந்த இரண்டரை வருடங்களில் இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இன்னும் இரண்டரை வருடங்களில் இந்த அரசு தேர்தலை எதிர்நோக்கவேண்டியுள்ளது அந்த இரண்டரை வருடம் ஆயுள்கூட இந்த அரசு இருக்கும் என நான் நம்பமாட்டேன் என்றும் அவர் கூறினார்.

# சந்தியா எக்னெலிகொடவிற்கு அமெரிக்காவில் உயரிய விருது



காணாமற்போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவிற்கு ஐக்கிய அமெரிக்க இராஜாங்க செயளாலரினால்; 2017ஆம் ஆண்டுக்கான 'மனோதிடம் கொண்ட சர்வதேச பெண்மணி; என்ற விருது வழங்கப்படவுள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மேலும் பன்னிரண்டு பெண்களுடன் சந்தியாவும் இணைந்துகொண்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது கணவனுக்காக இலங்கையில் பல்வேறு இன மத சமூகங்களைச் சார்ந்த காணாமல் போனோரது குடும்பங்களுக்காகவும் சளைக்காமல் தொடர்ந்து செயற்பட்டமைக்காகவும், அமெரிக்க முதல் பெண்மணி மிலானியா ட்ரம்ப் மற்றும் அரசியல் விவகாரங்களுக்கான இராஜாங்க உதவிச் செயலாளர் தோமஸ் யு செனோன ஆகியோரும் இணைந்து இவ்விருதினை வழங்கவுள்ளனர்.

கௌரவத்தைப் பெற்றுக்கொள்ளும் 13 பெண்களும் இளம் வயது திருமணம், பாலியல் வன்முறைகள், மானிட வர்த்தகம் என்பவற்றுக்கு எதிராக போராடியவர்கள் என்பதோடு, மதநம்பிக்கைகளுக்கிடையில் உறவை வளர்த்தல் சூழலைப் பாதுகாத்தல போன்ற பல்வேறு பிரச்சினைகளில் அவர்களது பரப்புரைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

மேலும், இலங்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்காக பரப்புரைகளில் ஈடுபட்ட புத்தளத்தைச் சேர்ந்த ஜான்சிலா மஜீத்திற்கு 2010 ஆம் ஆண்டு இவ்விருது வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு செல்ல அனுமதி கோரும் திஸ்ஸ அத்தநாயக்க



ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளிநாடு செல்வதற்கு அனுமதி கேட்டிருந்த வழக்கை ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் இருக்கும் தனது மகளை பார்க்க செல்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரி, திஸ்ஸ அத்தனாயக்கவால் மீள் பரிசீலனை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

போலி ஆவணங்களை தயார் செய்த குற்றச்சாட்டில் பிணை வழங்கப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு வெளிநாடு செல்ல தடைவிதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரலாற்று சாதனை: 8224 மாணவர்கள் 9 ஏ சித்தி

இம்முறை கல்வி பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையின் அடிப்படையில் வரலாற்றில் முதன்முறையாக 9 ஏ சித்திகளை 8 ஆயிரத்து 224 மாணவர்கள் பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு. எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் 9 ஏ சித்தி பெற்ற 6 ஆயிரத்து 102 மாணவர்கள் பதிவாகியுள்ள நிலையில், அதன் எண்ணிக்கையானது இம்முறை 2 ஆயிரத்து 122 ஆல் அதிகரித்துள்ளதாகவும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

கடந்த நான்கு வருடங்களில் 9 ஏ சித்தி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் 2014 ஆம் ஆண்டு 9ஏ சித்தி பெற்ற மாணவர்கள் 5 ஆயிரத்து 271 பேரும், 2013 ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 737 பேரும், 2012 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 509 பேரும் என பதிவாகியுள்ளது.

இதனடிப்படையில், 8 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் 9 ஏ சித்திகளை பெற்று வரலாற்று ரீதியாக சாதனை படைத்தது 2016 ஆம் ஆண்டு சாதாரணதரப்பரீட்சையிலேயே என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே.புஸ்பகுமார சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் கணித பாடத்தில் சித்தியடைந்தோர் 7.63 வீதத்தினால் அதிகரித்துள்ளது. அத்துடன் வரலாறு பாடத்தில் 80.75 வீதமானோர் சித்தியடைந்துள்ளனர்.

வெளியாகியுள்ள பெறுபேறுகளுக்கு அமைய உயர்தர வகுப்பிற்கு தோற்றுவதற்கு 69.94 வீதமானோர் தகுதி பெற்றுள்ளனர்.

# மேற்குலக அபிலாஷைகளை நிறைவேற்றவே இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம்

## ஒருங்கிணைந்த எதிரணித் தலைவர் தினேஷ் குணவர்தன

(அ.அருண் பிரசாந்த்)

மேற்குலக நாடுகளின் தேவைகளை எதிர்வரும் இரண்டு வருடங்களுள் பூர்த்தி செய்துகொள்ளவே இலங்கைக்கு ஐ.நாவினால் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று ஒருங்கிணைந்த எதிரணித் தலைவரான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பொரள்ளையில் அமைந்துள்ள என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இரண்டு வருடங்களுக்கு முன்பு எமது நாட்டுக்கு எதிரான தீர்மானமொன்றை வெளிவிவகார மங்கள சமரவீரவினால் ஐ.நாவில் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு சர்வதேசத்திடம் அடிபணித்து தமது அரசின் இருப்பையும் நலனையும் மட்டும் தான் இந்த அரசு சிந்தித்து வருகின்றது.

மேலும், இந்தச் செயற்பாடானது அரசமைப்பை மீறியே செயற்படுகின்றது என்று நாம் தொடர்ந்தும் வலியுறுத்திவருகிறோம். ஜனாதிபதியும் கலப்பு நீதிமன்றுக்கோ சர்வதேச நீதிபதிகளுக்கோ நாட்டில் அனுமதி இல்லை என்று கூறிக்கொண்டிருந்தாலும் அரசின் செயற்பாடுகள் இவற்றுக்கு மாறாகவே காணப்படுகின்றது.

காணாமால் போனோர் தொடர்பிலான சட்டமூலம் கூட அரசமைப்புக்கு முரணாகவே இருக்கின்றது. அந்த சட்ட மூலத்தில் உள்ள அதிபயங்கரமான சரத்துகள் எமது இராணுவத்திற்கே எதிராக உள்ளன.

அத்தோடு, சர்வதேச நீதிபதிகளை கொண்டுவர வேண்டுமாயின் அரசமைப்பை சர்வஜன வாக்கெடுப்புடன் நிறைவேற்ற வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தற்போது, சுமந்திரனும் ஐ.நாவில் இலங்கை கொடுத்த வாக்குறுதிக்கு அமைவாக அரசமைப்பை மாற்றியே ஆகவேண்டும் எனக் கூறுகிறார்.

ஆனால், நாட்டின் இறைமையை எவருக்கும் காட்டிக்கொடுக்க முடியாது. அரசமைப்பை மீறி வெளிவிவகார அமைச்சரும் செயற்பட முடியாது. அவ்வாறு அரசமைப்பை எவரேனும் மீறுவார்களாயின் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பதையே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம் என்றார்.



பொதுநலவாய மாநாட்டின் பொதுச் செயலாளர் பெட்டிசியா ஸ்கொட்லேன்ட் மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய இருவருக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. ஆசிய பசுபிக் வலயத்தின் சிறந்த நிதி அமைச்சராக தெ பென்கர் விருதினை பெற்றுகொள்வது தொடர்பில் பிரித்தானியாவிலுள்ள லண்டன் நகர ஹோட்டலிலேயே சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் பிரித்தானியாவிலுள்ள இலங்கைக்கான தூதுவர் அமிரி விஜேவர்தனவும் கலந்துகொண்டார்.

# கீத் நொயரை கடத்த பயன்படுத்தப்பட்ட கார் கண்டுபிடிப்பு

ஊடகவியலாளர் கீத் நொயரை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வேன் பிலியந்தலை பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள இராணுவ மேஜர் புலவத்தகேவுக்கு நெருக்கமான பெண் ஒருவரின் வீட்டில் இருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று குறித்த வேன் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஊடகவியலாளர் கீத் நொயரை கடத்துவதற்கு மற்றும் லசந்த விக்ரமசிங்கவின் படுகொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுக்கு இந்த வேன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை இராணுவப் படையின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினரான மேஜர் ஒருவர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



## மத்திய மாகாணசபைக்கு அசோக ஹேரத் நியமனம்

மத்திய மாகாணசபை உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சி கொத்மலை ஐ.தே.க பிரதம அமைப்பாளர் அசோக ஹேரத்தினை நியமித்துள்ளது.

நுவரெலிய மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரேணுகா ஹேரத் மரணமானதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே அசோக ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்கடிதத்தை ஐ.தே.க. பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசீம் அண்மையில் கையளித்தார்.

# பரீட்சையில் தோல்வி; இரு மாணவர்கள் தற்கொலை

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத காரணத்தினால் மாணவன் ஒருவரும், மாணவி ஒருவரும் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

குறித்த சம்பவம் ஜாஎல மற்றும் ஹோமாகம பிரதேசங்களில் பதிவாகியுள்ளது.

ஜாஎல, காணுவத பிரதேச பாடசாலை மாணவன் ஒருவர் கணிதப்பாடத்தில் சித்தி பெறாமையினால் ஜாஎல துடெல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை புகையிரதம் முன் குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இவர் அநுராதபுரம், ஊஸ்கல பிரதேசத்தை சேர்ந்தவர். தனது உறவினர்கள் வீட்டுக்கு செல்வதாக கூறியே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இதேவேளை, ஹோமாகம மகா வித்தியாலயத்தில் மாணவியொருவர் கல்வி கற்று வந்த நிலையில், இரண்டாவது முறையாக க.பொ.த சாதாரண தரப்பரீட்சை எழுதி வணிகக்கல்வி மற்றும் கணித பாடங்களில் சித்திபெறாமையினால் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.



நவமணி



# இன்புளுவென்சா வைரஸிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறீர்களா?

பன்றிக்காய்ச்ல் என்பது (H1N1) எனப்படும் ஓர் இன்புளுவென்சா வைரசால் ஏற்படும் காய்ச்சல் ஆகும். இன்புளுவென்சா (Influenza) என்பது சுவாசத் தொகுதியைத் தாக்கும் ஒரு வைரஸ் ஆகும்.

இது இன்று நேற்றல்ல, பல்லாயிரக் கணக்கான வருடங்களாக மனிதரைத் தாக்கி வருகின்றது. இன்புளுவென்சா வைரசில் அ, ஆ, இ என மூன்று வகையுள்ளன.

இவற்றுள் இன்புளுவென்சா A தான் வீரியம் கூடியது. இன்புளுவென்சா A ஐ அதன் மேற்பரப்பிலுள்ள Hemagglutinin மற்றும் Neuraminidase என்னும் புரதங்களின் அடிப்படையில் வகைப்படுத்துவார்கள். ஏ என அழைக்கப்படும் Hemagglutinin புரதத்தில் 18 வைரஸ்"களும் N என அழைக்கப்படும் N இல் 11 வகைகளும் உள்ளன (H1N1) எனப்படுவது 2009 ஆண்டு முதல் 2010 வரை உலகம் முழுவதும் பரவி வரும் swine flu எனப்படும் பன்றிக்காய்ச்சல் ஆகும்.

**இன்புளுவென்சா வைரஸ் எவ்வாறு காலத்துக்குகாலம் வேறுபடுகின்றது?**


உமது உடலிலுள்ள நீர்பீடணத் தொகுதியின் புளுவென்சா வைரஸ் கிருமிக்கெதிராக எதிர்ப்புச் சக்தியை உருவாக்கும். ஆனால் வைரஸின் மேற்பரப்பிலுள்ள புரதங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நோயெதிர்ப்புச் சக்தியிலிருந்து தப்பி காலத்துக்கு காலம் மக்களிடையே நோயை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான இன்புளு



வென்சா காய்ச்சல் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகின்றது. குளிர்வலய நாடுகளில் குளிர் காலத்தில் (Winter) காய்ச்சல் பொதுவாகப் பரவுகின்றது. ஆனால் இலங்கை, இந்தியா போன்ற வெப்ப வலய நாடுகளில் வருடம் முழுவதும் நோய்த்தொற்றல் ஏற்படலாம்.

இன்புளுவென்சா எவ்வாறு பரவுகின்றது?

நோயாளி ஒருவர் தும்மும் போதும் இருமும் போதும் சிறுதுளிகள் காற்றில் பரவி அருகில் உள்ளவரின் சுவாசப்பாதை வழியாகத் தொற்று ஏற்படுகின்றது. நோயாளியையோ அவர் பயன்படுத்திய பொருள்களையோ தொட்டு விட்டு கண், வாய், மூக்கு போன்ற பகுதிகளைத் தொடும் போது பரவலாம்.





**இன்புளுவென்சா நோயின் அறிகுறிகள் என்ன?**

நோய்த் தொற்று ஏற்பட்டவர் 2 நாள்களில் அறிகுறிகளை வெளிக்காட்டுவார். காய்ச்சல் இருமல், தொண்டை வலி, மூக்கடைப்பு, மூக்கிலிருந்து நீர் சிந்துதல், தலையிடி, தசைவலி, மூட்டுவலி, களைப்பு, போன்றவை பொதுவான அறிகுறிகளாகும். சிலருக்கு பசியின்மை, வாந்தி போன்றவையும் ஏற்படலாம்,சிலருக்கு வயிற்றோட்டமும் ஏற்படலாம்.

மூச்சுவிடச்சிரமப்படல், அறிவு மயங்குதல் வலிப்பு ஏற்படுதல் போன்றவை அபாயகரமான நிலைமைகளாகும்.

**இன்புளுவென்சா நோய் வராமல் தடுக்கும் வழிகள் எவை?**

நோய் வாய்ப்பட்டவர்கள் சில வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அது மற்றவர்களுக்குத் தொற்றாமல் பாதுகாக்கலாம். தும்மும் போதும் இருமும் போதும் கைக்குட்டையையோ பேப்பரையோ உபயோகித்து முகத்தை மூட வேண்டும். அதே போல பயன்படுத்திய கைக்குட்டைகளைச் சவர்க்காரமிட்டு நீரில் துவைக்க வேண்டும். அத்துடன் நோய் வாய்ப்பட்டவர்கள் சனக்கூட்டங்களுக்குள் செல்வதையும் பொது போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். நோய்வாய்ப்பட்டவர்களும் அவர்களைப் பராமரிப்பவர்களும் முகக் கவசம் அணிவதன் மூலமும் ஓரளவு நோய்த்தொற்றலைத் தடுக்க முடியும்.

**நோய்வாய்ப்பட்டவர்களுக்கான சிகிச்சைகள் எவை?**

நோய்வாய்ப்பட்டவர்கள் நல்ல ஓய்வு எடுக்க வேண்டும். சூப், கஞ்சி, இளநீர் போன்ற நீராகாரங்களை அதிகளவு பருக வேண்டும். வலி, காய்ச்சல் இருப்பின் பரசிடமோல் மாத்திரைகளை வைத்தியரின் ஆலோசனையின் படி பயன்படுத்த வேண்டும். கர்ப்பிணிகள், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், நீண்டகால சிறுசீரக, ஈரல், இருதய, நுரையீரல் நோய்கள் உள்ளவர்கள் வைத்திய நிபுணர் ஒருவரின் ஆலோசனை பெறல் அவசியமாகும். அவர்களில் அபாயகரமான அறிகுறிகள் இருப்பவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

மேலும் மூச்சுவிடச் சிரமப்படுபவர்களும் நியூமோனியா இருப்பதற்கான அறிகுறிகள் உள்ளவர்களும் தொடர்ச்சியான வாந்தியால் போதிய நீராகாரங்களை எடுக்க முடியாதவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும்.

அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் முன் குறிப்பிட்ட இன்புளுவென்சாவால் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் அபாயகரமான அறிகுறிகள் உள்ளவர்களுக்கும் tamilflu எனப்படும், Oseltamivir எனப்படும் மருந்து வழங்கப்படுகின்றது. இந்த மருந்து எல்லோருக்கும் கொடுக்கத் தேவையில்லை எமது உடலிலுள்ள நோய் எதிர்ப்பு சக்தியே ஆரோக்கியமானவர்களின் வருத்தத்தை மாற்றப் போதுமானதாகும்.

3 நாள்களுக்கு மேல் தொடர்ச்சியாக காய்ச்சல் இருக்குமாயின் வைத்தியர் ஒருவரை அணுகி FBC (Full blood count) எனும் குருதிப் பரிசோதனையைச் செய்வது நல்லது. ஏனென்றால் ஆரம்ப நிலைகளில் டெங்கு நோயையும், இன்புளுவென்சா நோயையும் பிரித்தறிவது கடினம் ஆகும்.


முடிவாக (H1N1) எனப்படும் பன்றிக்காய்ச்சல் ஒரு சாதாரண வைரஸ் காய்ச்சலாகும். இதையிட்டு அனைவரும் பீதியடையத் தேவையில்லை.

அதேவேளை இதனால் அதிகம் பாதிப்படையக் கூடியவர்கள் அவதானமாக இருக்க வேண்டும். அடிப்படைச் சுகாதார பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தாலே நோய் பரம்பலைக் கட்டுப்படுத்தலாம்.

★★★







# தனியாக இருக்கும் போது மாரடைப்பு ஏற்பட்டால்?

மாரடைப்பு எப்போது வேண்டுமானாலும் வரலாம். அலுவலகப் பணிகளை முடித்து விட்டு வீட்டிற்கு தனியாக சென்று கொண்டிருக்கும் போது,அல்லது வேலை பளுவின் காரணமாக, மற்றும் இதர சில பிரச்சினைகள் காரணமாக உங்கள் மனம் மிகவும் அழுத்தத்துடன் காணப்பட்டால், மாரடைப்பு ஏற்பட்டுவிடும். மிகவும் படபடப்பாகவும், தொய்வாகவும் உள்ளீர்கள், திடீரென்று உங்கள் இதயத்தில் அதிக வலி ஏற்படுவதை உணர்கிறீர்கள், அந்த வலியானது மேல் கை முதல் தோள் பட்டை வரை பரவுவதை உணர்ந்தால் அது மாரடைப்புக்கான அறிகுறியாகும்.

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து மருத்துவமனை மிக நீண்ட தூரத்தில் இருப்பின் அந்த நேரத்தில் நம் உயிரை நாமே காக்க என்ன செய்ய வேண்டும்? துரதிஷ்டவசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாக இருந்திருப்பவர்களே அதிகம். இதயம் தாறுமாறாக துடிக்கிறது. சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள் தான் உள்ளது.

இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும வேண்டும், ஒவ்வொரு முறை இருமுவதற்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும். இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும் இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமிக்கொண்டே இருக்க வேண்டும்.

மூச்சை இழுத்து விடுவதினால் நுரையிரலுக்கு ஒச்சிஜன் சீராக செல்ல வழி கிடைக்கிறது. இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக்கொண்டே இருக்க உதவும். இதனால் இரத்தஓட்டம் சீரடையும். இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும். பின்னர் இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று உரிய சிகிச்சைகளை மேற்கொள்ளலாம்.

# யாரையும் ஏளனம் செய்ய வேண்டாம்....

வெயிலில் வந்த களைப்பு அவர் முகத்தில் தெரிந்தது. அவர் அங்கு ஓர் இடத்தில் அமர்ந்து சேர்வரிடம் கேட்டார் ''தம்பி இங்கு சாப்பாடு என்ன விலை'' அதற்கு சேர்வர் '50 ரூபாய்' என்றான்.

பெரியவர் தனது சட்டை பைக்குள் கை விட்டு பார்த்து சேர்வரிடம் கேட்டார் தம்பி அதற்கும் சற்று குறைவாக சாப்பாடு கிடைக்காதா.. ? சேர்வர் கோபமாக 'ஏன் வா இங்க வந்து எங்க உயிர எடுக்கிறிங்க. இதை விட மலிவான ஹோட்டல் எவ்வளவோ இருக்கு அங்க போய் தொலைங்கயா' என்றான்.

பெரியவர் சொன்னார் 'தம்பி தெரியாமல் இங்கு வந்துவிட்டேன் வெளியே வெயில் வேறு அதிகமா இருக்கு. நான் இனி வேறு ஹோட்டலுக்கு செல்வது சற்று சிரமம்.' சேர்வர் 'சரி..சரி எவ்வளவு பணம் குறைவா வச்சுயிருக்க?' என்று கேட்டான்.பெரியவர் 'என்னிடம் 45 ரூபாய் தான்இருக்கிறது.' என்றார்.சேர்வர் 'சரி தருகிறேன். ஆனால் உனக்கு தயிர் இல்லை சரியா?' என்றான்..பெரியவர் 'சரி' என சம்மதித்தார்.சேர்வர் சாப்பாடு கொடுத்தான். பெரியவர் சாப்பிட்டு விட்டு அந்த சேர்வரிடம் 50 ரூபாய் கொடுத்தார்.

சர்வர் மேலும் கோபம் ஆனான்.இந்தா 50 ரூபாய் வச்சுயிருக்கிறாயே! 45 ரூபாய் தான் இருக்குன்னு சொன்ன..? ஓ.. வெற்றிலை. பாக்கு வாங்குறதுக்கு 5 ரூபாய் தேவைப்படுதா..? இந்தா மீதி 5 ரூபாய். என்று மீதியை கொடுத்தான்.பெரியவர் சொன்னார் வேண்டாம் தம்பி அது உனக்குத் தான். உனக்கு கொடுக்க என்னிடம் வேறு பணம் இல்லை.' சொல்லிவிட்டு வெயிலில் நடந்து சென்றார். சேர்வருக்கு கண்களில் நீர் ததும்பியது. அன்பு நண்பர்களே யார் எந்த சூழ்நிலையில் எப்படி இருப்பார்கள் என்று நமக்கு தெரியாது. யாரையும் ஏளனமாக பார்ப்பதும் பேசுவதும் தவறு.!

## ஒரு மரத்தை வெட்டினால் 18 இலட்சத்தை இழக்கின்றீர்கள்!

ஒரு விஞ்ஞானி மரத்தின் சேவையை பணத்தின் அடிப்படையில் கணக்கிட்டிருக்கிறார்.அதன்படி ஐம்பது ஆண்டுகள் வரை வாழும் ஒரு சாதாரண மரம் தனது ஆயுட் காலத்தில் 18 இலட்சம் ரூபாய் பெறுமான சேவை செய்கிறது.

1.ஒவ்வொரு ஆண்டும் அம்மரம் வெளியிடும் ஒக்சிஜனின் மதிப்பு ரூ50000/-


2.புரதப் பொருளாக மாற்றும் சேவை ரூ.20000/-

3.ஒரு மரம் காற்றை சுத்திகரிக்கும் செயலை நாம் செய்தால் அதற்கு ஆகும் செலவு ரூ.5,00,000/-

4.மரம் வெட்டப்பட்டால் அங்கு அதே அளவு மண் வளத்தைப் பாதுகாக்க 50ஆண்டுகளில் நமக்கு ஆகும் செலவு ரூ.3,00,000/-

5.மரத்தின்நிழலிலும்,பாதுகாப்பிலும் தங்கும் பறவைகள்,விலங்குகள் முதலியவற்றிற்கு மரம் செய்யும் சேவையை நாம்செய்தால் அதற்கு ஆகும். செலவு ரூ.3,00,000/-

எனவே ஒரு மரம் வெட்டுமுன் ஆயிரம் முறை யோசிக்க வேண்டும்.







# வாட்ஸ் அப் பயனாளர்களுக்கு ஒரு புதிய சிக்கல்

இன்று அதிக மக்களை ஈர்த்துள்ள ஒரு விடயமாக வட்ஸ்அப் மாறிப் போயுள்ளது. இந் நிலையில் வட்ஸ் அப் தொடர்பில் ஒரு அதிர்ச்சி தகவல் ஒன்று வெளி வந்துள்ளது.

தகவல்களை பரிமாறிக்கொள்வதற்காக, என்க்ரிப்ஷன் தொழில்நுட்ப வசதியை கொண்டுள்ள செயலியின் தரவுகளை, என்க்ரிப்ஷன் வசதியை கொண்டே ஊடுருவ முடியுமெனவும், அதனால் 100 மில்லியன் வட்ஸ் அப் மற்றும் டெலிகிராம் பாவனையாளர்கள் பாதிப்படையும் ஆபத்துள்ளதாக செக் பாயிண்ட் மென்பொருள் தொழில்நுட்பவியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.வட்ஸ் அப் செயலியின், கணினி பதிப்புகளில் ஏற்பட்டுள்ள பிழைகள் 100 மில்லியனுக்கும் அதிகமான வட்ஸ்அப் பாவனையாளர்களை பாதிக்குமெனவும், குறித்த புதிய பிழை காரணமாக பெரும்பாலான வாட்ஸ்அப் மற்றும் டெலிகிராம் பயனாளர்களின் தரவுகளை ஊடுருவும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊடுருவலில் ஈடுபடும் விஷமிகள் மூலம், ஒரே வகையான படத்தை அனுப்பி, கணக்குகளை முழுமையாக இயக்க முடியும். அத்தோடு பாவனையாளர்களின் தகவல் பரிமாற்றுக்களை இயக்கக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளதாக செக் பாயிண்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



புதிய பிழையை கொண்டு டிஜிட்டல் புகைப்படங்கள் மூலம் அனுப்பப்படும் இரகசிய குறியீடுகளை கொண்டு, பாவனையாளர்களின் செயலியை முழுமையாக இயக்க முடியும் என்பதோடு, அவர்களின் தொடர்புகள் உள்ளிட்ட தரவுகளை களவாடும் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக இஸ்ரேலிய தொழிநுட்ப நிறுவனமான செக் பாயிண்ட் தெரிவித்துள்ளது.

# மனஅழுத்தத்தை கட்டுப்படுத்தும் வீடியோ கேம்

வீடியோ கேம்களை விளையாடுபவர்கள் மற்றவர்களை காட்டிலும் எளிமையாக மன அழுத்தத்தை கட்டுப்படுத்த முடியும் என சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வீடியோ கேம், குறிப்பாக ரிமைண்டர்கள் கொண்ட கேம்களை விளையாடினால் மன அழுத்தத்தை எதிர்கொள்ள முடியும் என அமெரிக்காவின் கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். ஆய்வு குழுவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவரும் இடம்பெற்றுள்ளார்.

கலிபோர்ணியா பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் 160 மாணவர்கள் 21 வயதிலேயே குறைந்த அளவு மன அழுத்தத்தை எதிர்கொண்டதாக தெரிவித்துள்ளனர். இதில் நான்கில் மூன்று பேர் பெண்கள் என்றும், பாதிக்கும் மேற்பட்டோர் ஆசிய பாரம்பரியத்தை சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

ஆறு நிமிடம், மூன்று நிமிடம் என பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள வீடியோ கேம்களை விளையாடும் போது மன அழுத்தத்தை அவர்களால் கட்டுப்படுத்த முடிந்தது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். உடலினுள் ஏற்படும் உயிரியல் மாற்றங்களால் மன அழுத்தம் ஏற்படுகிறது என்ற ரீதியில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கேம்களை விளையாடும் போது மன அழுத்தத்தை கட்டுப்படுத்த முடிவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் இந்த முடிவுகள் தற்காலிகமானது தான் என்றும் இவற்றில் நீண்ட கால பயன்கள் இருக்காது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட வீடியோ கேம்கள் புதிய வகை மருத்துவ சிகிச்சை முறை போன்று பயன்படுத்த முடியும்.



# குழந்தையின் மூளைத்திறன்!

குழந்தையின் மூளை இரகசியக் களஞ்சியம். அதன் எண்ணற்ற விந்தைகளை விஞ்ஞானிகள் இப்போது தான் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்து வருகிறார்கள்.

கருவிலேயே தொடங்குகிறது இதன் கதை.கரு உண்டாகி நான்கே வாரங்களில் முதலாவது மூளை உயிரணுக்கள் நியூரோன்கள் உருவாகின்றன. நிமிடத்திற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் உயிரணுக்கள் என்ற ரீதியில் கோடிக் கணக்கில் நியூரோன்கள் தோன்றி கோடான கோடி தொடுப்புகளை ஒன்றுடன் ஒன்று உண்டாக்குகின்றன. இவையெல்லாம் மிகக் கவனமாக ஏற்படுத்தப்பட்டவை.குழந்தையின் மூளை கற்றுக் கொள்வதற்கு வசதியான கருவியாகும். குறுகிய காலத்தில் குழந்தை எல்லாம் கற்றுக் கொள்ளும். தவழ்வதற்கு, நடப்பதற்கு, ஓடுவதற்கு என்று எல்லாவற்றையும் கற்றுக் கொண்டே போகும். எதிலும் தேடல் ஆர்வம் என கல்வி வாழ்க்கை வரை இது நீளும். நாம் எவ்வளவுக்கு குழந்தையுடன் கொஞ்சி, விளையாடுகிறோமோ அந்த அளவுக்கு நல்ல மனவளர்ச்சி இருக்கும்.

பிள்ளைகளின் மூளை வளர்ச்சி முதல் 3 ஆண்டுகள் வேகமாக இருக்கும். குழந்தைகளின் மூளை உயிரணுக்களின் வளர்ச்சி, அவர்கள் வளரும் சூழலையும், அனுபவங்களையும் பொறுத்து இருக்கும். பெற்றோர்களாகிய நாம் அவர்களுக்கு நல்ல அனுபவங்களை வழங்க வேண்டும்.

# பேருவளை அப்ரார் கல்வி நிலையப் பணிகளுக்கு பாராட்டு

(பேருவளை பி.எம். முக்தார்)

பேருவளை மருதானை அப்ரார் கல்வி நிலையத்தின் விசேட கூட்டமொன்று மருதானை அரப் வீதியில் உள்ளமர்ஷூக் ஆசிரியரின் இல்லத்தில் நடைபெற்றது.

நிலையத் தலைவரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ.டப்ளியு. எம். அஜ்வாத் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தேசிய ஊடக மத்தியநிலையத்தின் தலைவரும் மேற்படி கல்விநிலைய ஸ்தாபகருமான அல் - ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அவரது புதல்வர் பாதில் பாக்கிர் மாக்கார் ஆகியோர் பங்குபற்றினர்.

பேருவளை பிரதேசத்தில் அப்ரார் கல்வி நிலையம் கடந்த காலத்தில் கல்விநடவடிக்கைகளுக்காக ஆற்றிய பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள பணிகள் குறித்து இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. பேருவளை நகர சபை முன்னாள் தலைவர் மஸாஹிம் முஹம்மத், ஓய்வுபெற்ற அதிபர்களான எம்.ஐ.எம். பாரூக், எம்.எஸ்.எம். அன்வர், எம். எல்.ஏ.எம். அப்துல் அஹ்லா பிரதம மந்திரி ஊடகப்பிரிவைச் சேர்ந்த ஹலீம் ஏ. அஸீஸ் பள்ளிவாசல், ஸாவியா நிர்வாகிகள், சமூக சேவையாளர்கள், அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி, அப்ரார் கல்வி நிலைய நிர்வாகிகள் உட்பட பலரும் இக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

பிரதேசத்தின் கல்வி நிலையை மேம்படுத்த வேண்டி அப்ரார் கல்வி நிலையம் பாரிய பணிகளைச் செய்வது குறித்து பாராட்டுத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எதிர்காலத்தில் இந்தகல்வி நிலையம் பல்வேறு செயற்திட்டங்களை வகுத்துசெயல்படவேண்டும் என்றும் இவ்வூர் மக்கள் இதற்கு மேலும் பங்களிப்பு வழங்க வேண்டும் என்றும் கூறினார். ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி மேற்படி கல்வி நிலையம் நடாத்தவுள்ள முப்பெரும் விழா ஏற்பாடுகள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

# கெக்கிராவ முஸ்லிம் வித்தியாலயம் சித்தி



(அஸீம் கிலாப்தீன்)

வெளியிடப்பட்ட சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி மொஹமட் ரமீஸ் மொஹமட் இஹ்ஸான் மற்றும் மொஹமட் நஸீர் பாத்திமா ஸஹ்ரா ஆகிய இரு மாணவர்களும் 9 ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். ரம்ஸீன் உபைதுர் ரஹ்மான் என்ற மாணவன் 8 ஏ, 1 பி சித்தியைப் பெற்றுள்ளார்.

தமிழ், சமயம், சிங்களம், புவியியல், வணிகம், மனைப்பொருளியல் ஆகிய பாடங்களில் 100% சித்தியும் இஸ்லாம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு , தமிழ் இலக்கியம், விவசாயம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் 90% க்கு மேற்பட்ட சித்தியையும் பாடசாலை பெற்றுள்ளது.

# நச்சுப்பொருட்களின் பாவனையால் யுத்தத்தினை விட அதிகளவானோர் இறப்பு

## மட்டக்களப்பில் அத்துரலியே ரத்ன தேரர்



(கதாத்தான்குடி பழுலுல்லாஹ் பர்ஹான்)

சகோதர மக்கள் யூரியா மற்றும் நச்சுத் தன்மையான பொருள்களை பாவித்தமையினால் யுத்தத்தினைவிடவும் அதிகப்பேர் இறந்திருக்கிறார்கள் என்று ஜனாதிபதி செயலகத்தின் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் பிரதானியான அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி செயலகத்தின் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் தார்மீக விவசாயம் ஆரோக்கியமான சமுதாயம் என்ற தொனிப்பொருளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நச்சுத் தன்மையற்ற நாடு எனும் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் மாவட்ட கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் பகிரும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், நீர் மாசடைதல், இரசாயனம் கலத்தல் ஆகிய காரணங்கள், இரசாயனப் பாவனைகளால் புற்றுநோய், சிறுநீரக நோய்களும் அதிகளவில் ஏற்படுகின்றன. ஆசனிக் இதில் முக்கிய இடம் பெறுகிறது. நீரைக் கொதிக்க வைக்கும் அலுமினியம் பாத்திரங்களில் அதிகம் கலக்கிறது. யூரியாவை நாம் பாவித்து அறுவடை முடிந்தாலும் நீரில் அது கலந்தே இருக்கும். நாம் மிகவும் குறைந்த காலமே வாழப் போகிறோம். யூரியாப் பாவனையானது மிகவும் ஆபத்தானது. வறுமை ஒழிப்பைப் போலவே இந்த இரசாயனப் பாவனையையும் இல்லாமல் செய்ய வேண்டும். உங்களுடைய சகோதர மக்கள் யூரியா மற்றும் நச்சுத்தன்மையான பொருட்களை பாவித்தமையினால் யுத்தத்தினை விடவும் அதிகப்பேர் இறந்திருக்கிறார்கள்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வருடாந்தம் 15ஆயிரம் பேர் இறக்கிறார்கள். யுத்தத்தினைவிடவும் அதிகமானவர்கள் இறக்கிறார்கள். இதற்கெல்லாம் அரச சேவையில் இருப்பவர்கள்தான் ஏதாவது செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. உண்மையில் முழு உலகத்திலுமே இரண்டு மாதங்களுக்குள் 5ஆயிரம் தொன் பசளையை உருவாக்கிய ஒரேயொரு நாடு இலங்கைதான். திருகோணமலையில் நாங்கள் முன்னெடுத்த திரவ பசளை பாவனைத் திட்டத்தின் ஊடாக இரசாயனப்பசளையைப்பார்க்கிலும் 90 வீதமான உற்பத்தியினைப் பெற்றுள்ளோம். விசேடமாக யூரியா பாவிக்கின்ற இடங்கள் வரண்டு போய் விடும் நாங்கள் பாவிக்கின்ற திரவப் பசளையில் நல்ல ஈரலிப்பும் திறனும் இருக்கிறது.

எனவே இரசாயனப் பாவனையினை இல்லாமல் செய்து இயற்கையான பசளைகளை பாவிப்பதன் மூலமும் எண்ணை வகைகளைப்பயன்படுத்துவதன் மூலமும் நோயற்ற சமுதாயத்தினை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குங்கள் என்றார்.

பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

# பங்களாதேஷ் மாநாட்டில் இலங்கை எம்.பிக்கள்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன் )

பங்களாதேஷில் இடம்பெறும் 136 ஆவது அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வில் Assembly of the inter parliamentary Union பங்களாதேஷில் இடம்பெறும் அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் அமர்வில் மஸ்தான் காதர், மஹ்றூப் அப்துல்லாஹ், சதாசிவம், வியாழேந்திரன் ஆகிய எம்.பிக்கள் பங்கேற்கின்றனர்.

உலகின் 180 நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் டாக்காவில் ஏப்ரல் 01ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 05ஆம் திகதி வரை இடம்பெறும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையிலிருந்து பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான மஸ்தான் காதர், மஹ்றூப் அப்துல் லாஹ், குமாரி விஜயரத்ன றோஹினி ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

# சாதாரண தரத்தில் காத்தான்குடி மீராபாலிகா மாணவிகள் சாதனை



(கத்தான்குடி டீன்பைரூஸ்)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய காத்தான்குடி மீராபாலிகா மகா வித்தியாலய மாணவிகளில் 16 பேர் 9 ஏ தர சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்.

மேற்படி சித்தியடைந்த மாணவிகளை பாராட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (28) வித்தியாலயத்தின் முதல்வர் எம்.ஏ.சீ.எம்.சத்தார் தலைமையில் இடம் பெற்றது. மட்டக்களப்பு மத்திய வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். இஸ்ஸதீன், பிரதேசகல்விப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். பதுர்தீன், வித்தியாலயத்தின் உதவிஅதிபர் எம்.இல்யாஸ் பாடசாலை அபிவிருத்தி குழு செயலாளர் பொறியியலாளர் எம்.சமட் உட்பட ஆசிரியைகளும் கலந்துகொண்டனர்

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்தின் மூன்றுகோட்டத்திலிருந்தும் 46 மாணவர்கள் 9 ஏ தரத்தில் சித்தியடைந்து வலயத்திற்கு பெருமை பெற்றுத்தந்துள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்துகருத்துதெரிவிக்கையில், 9 ஏ தரத்தில் சித்தியடைந்த மாணவர்களில் காத்தான்குடிகோட்டத்திலிருந்து 31 மாணவர்களும், ஏறாவூர் கோட்டத்திலிருந்து 9 மாணவர்களும், கோரளைபற்றுமேற்கு கோட்டத்திலிருந்து 6 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். மாணவர்களின் வெற்றிக்காக பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். இஸ்ஸதீன் தெரிவித்தார்.

# மூன்று வகையான தொற்று நோய்கள்; எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகோள்

( மினுவாங்கொடை நிருபர் )

நாடு முழுவதும் தற்போது டெங்கு, டெங்கு நோய்க்கு இணையானதொரு வைரஸ் மற்றும் பன்றிக் காய்ச்சல் போன்ற மூன்று வகையான தொற்று நோய்த் தாக்கங்கள் பரவி வருவதாக, சுகாதார அமைச்சு அறிவித்துள்ள நிலையில், இந் நோய்த் தாக்கங்களிலிருந்து தம்மையும், தமது சிறு பிள்ளைகளையும் இயன்றளவு பாதுகாத்துக் கொள்ளுமாறு, மினுவாங்கொடை பிரதேச வாழ் மக்களை முன் கூட்டியே, மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் பத்தண்டுவன பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். ஆர். எம். எஸ். ஆர். சமர திவாகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக, சிறு பிள்ளைகளுக்கு இந் நோய்கள் விரைவில் தொற்றக் கூடும் என, சுகாதார அமைச்சு சிவப்பு அறிவித்தல் விடுத்துள்ளதால், இது குறித்து பெற்றொர்கள் முன் கூட்டியே விழிப்புடனும், அவதானத்துடனும் செயற்படுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் மினுவாங்கொடை, கல்லொழுவை, கோப்பிவத்தை ஆகிய பிரதேசங்களில் டெங்கு மற்றும் டெங்கு நோய்க்கு இணையானதொரு வைரஸ் காய்ச்சல், மிகத் துரிதமாகப் பரவி வருவது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இப் பிரதேசங்களிலுள்ள எவருக்காவது காய்ச்சல் ஏற்பட்டுள்ள அறிகுறிகள் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் தென்பட்டால், எந்த வித கால தாமதமுமின்றி அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும், அவர் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

இதேவேளை, பொல்வத்தை, பத்தண்டுவன, கொட்டுகொடை ஆகிய பிரதேசங்களில் பன்றி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர், பன்றிக் காய்ச்சல் தொடர்பில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் இப்பிரதேச மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.



பலாங்கொடை ஜனாஸா சங்கத்தின் ஏற்பாட்டில் (ஜமாஅத்தினர்) பிரதேச மக்கள் கலந்து கொண்ட சிரமதான வைபவமொன்று பலாங்கொடை முஸ்லிம் மையவாடியில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மற்றும் நிகழ்வுகளைப் படத்தில் காணலாம். (ஏ.ஏ.எம். பாயிஸ்)

# வர்த்தமானி அறிவித்தலை இரத்தாக்குமாறு கோரி முசலி மக்கள் போராட்டம்



(எஸ்.எச்.எம்.வாஜித்)

மன்னார் முசலி பிரதேசத்தில் உள்ள அதிகமான பூர்வீக இடங்களை வில்பத்து வன பகுதிக்கான எல்லையாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய வர்த்தமானியில் கையொப்பம் ஈட்டதை தொடர்ந்து வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக ஜனாதிபதி ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் மரிச்சிகட்டி, பாலைக்குழி மற்றும் கரடிக்குழி மக்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக ஏற்பாட்டு குழுவினர் தெரிவித்தார்கள். மேலும் தெரிவிக்கையில்,

பல வருடகாலமாக நாங்கள் வாழ்ந்த காணிகளை வில்பத்து பிரதேசமாக பிரகடனப்படுத்தியதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம் ஒரு போதும் எங்கள் தாய் மண்ணை விட்டு வெளியேற மாட்டோம் என்றும் நேற்று கூட ஜனாதிபதிக்கு எங்கள் கோரிக்கையினை முசலி பிரதேசத்தில் உள்ள அனைத்து சமூக மட்ட அமைப்புக்கள் ஊடாக எங்கள் பிரச்சினையினை அனுப்பி இருக்கின்றோம். கடந்த ஆட்சி காலத்தில் எங்களுக்கு அநியாயம் இடம்பெற்றதாக தெரிவித்து தான் இந்த நல்லாட்சி அரசாங்கத்தை உருவாக்கினோம் ஆனால் இந்த அரசாங்கம் எங்களுக்கு நல்லதை செய்யாமல் எங்கள் உறவுகள் பரம்பரையாக வாழ்ந்த காணியினை கொள்ளை அடிக்கும் சூழ்ச்சி வேலைகளை செய்து உள்ளார்கள்.

எங்கள் போராட்டத்திற்கு கட்சி அரசியலுக்கு அப்பால் அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம். என தெரிவித்தார்கள்.



குருநாகல் தல்கஸ்பிடிய அல் அஷ்ரக் மஹா வித்தியாலய மாணவி பாத்திமா சுஹா க.பொ.ச.தரப் பரீட்சையில் 9ஏ பெற்று சித்தியடைந்துள்ளார். இப்பாடசாலையில் 3 மாணவிகள் 9ஏ சித்தியடைந்துள்ளார்கள். இவர் சரூக் ஆசிரியர் உம்மு ரைஹானா ஆசிரியரின் புதல்வியாவார்.

(பாஹிர் பாரூக் ரிதீகம நிருபர்)

# தாருல் ஹுதாவில் பட்டமளிப்பு விழா

(மருதமுனை நிருபர்)

மருதமுனை தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கான முதலாவது பட்டமளிப்பு, சனிக்கிழமை(1)மாலை 4.00 மணிக்கு கல்லூரியின் தலைவர் டாக்டர் ஏ.ஆர்.எம்.ஹாரிஸ் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக இந்தியாவைச் சேர்ந்த பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ் கலந்து கொள்கின்றார். மேலும் கௌரவ அதிதிகளாக பேராசிரியர் டாக்டர் எம்.ஏ.எம்.சித்தீக், தென்கிழக்குப் பல்கலைக் கழக அரபு இஸ்லாமிய கற்கைகள் பீடாதிபதி அஷ்ஷெய்க் எஸ்.எம்.எம்.மஸாஹிர் ஆகியோரும், விஷேட அதிதியாக கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி அஷ்ஷெய்க் எம்.எல்.முபாறக் மதனியும் கலந்து கொள்கின்றனர்.

முதலாவது பட்டமளிப்பில் 2012ஆம் ஆண்டு 17 பேரும், 2013 ஆம் ஆண்டு 16 பேரும், 2014 ஆம் ஆண்டு 15 பேரும், 2015 ஆம் ஆண்டு 22 பேரும், 2016 ஆம் ஆண்டு 42 பேருமாக 112 பேர் மும்தாஸ், ஜெய்யித் ஜித்தன், ஜெய்யித், மக்பூல் அகிய பட்டங்களைப் பெறுகின்றனர்.

# கொத்மலை கல்வி வலயத்தின் முஸ்லிம் பாடசாலைகள் சிறந்த பெறுபேறு

(ஹபுகஸ்தலாவை நிருபர்)

ஹபுகஸ்தலாவை அல்மின்ஹாஜ் தேசியப் பாடசாலை, கடந்த வருடங்களை விட கொத்மலை கல்வி வலயத்தில், வெளியாகிய கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு சிறந்த பரீட்சை பெறுபேறுகள் கிடைத்துள்ளதாக அதிபர் ஐ.ஏ.எம். அப்சான் தெரிவித்தார்.

அல்மின்ஹாஜ் தேசியப் பாடசாலையில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் எம்.என்.எம் அமான், எம்.ஏ.எம். மின்ஹாஜ் அமீர், ஏ.கே சஜீத் , எம்.ஏ. அஸ்னா, எம்.ஆர். மைமூனா, ஆகிய ஐந்து மாணவர்களும் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தினை பெற்றுள்ளனர். எம்.எம்.பி.எம். நாசீட், எம். வை. லுக்மான், எம்.ஆர்.எப். இப்லாஹ் ஆகிய மூன்று மாணவர்கள் எட்டு பாடங்களில் ஏ சித்தியையும் ஒரு பாடத்தில் பி சித்தியையும் பெற்று பாடசாலை மட்டத்தில் இரண்டாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

இப்பாடசாலையில் சாதாரணதரப் பரீட்சைக்கு 84 மாணவர்கள் தோற்றியுள்ளனர். கடந்த காலங்களை விட இம்முறை 20 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக அதிபர் அப்சான் தெரிவித்துள்ளார். மேற்படி பரீட்சைக்கு மாணவர்களை முறையாக நெறிப்படுத்திய சகல ஆசிரியர்களுக்கும் இப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமைசேர்த்துள்ள அனைத்து மாணவர்களுக்கு பாடசாலை ஐ.ஏ.எம் அப்சான் மற்றும் பிரதி அதிபர்கள், உப அதிபர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் இப்பாடசாலை முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்கள் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

அத்தோடு ஹபுகஸ்தலாவை அஹஸ்கவெவ காஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தில் மேற்படிப் பரீட்சைக்கு 15 மாணவர்கள் தோற்றி சகல பாடங்களுடன் சித்தியடைந்து 14 மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ளதாக காஹிரா முஸ்லிம் வித்தியாலய அதிபர் எம்.ஜே.எம். அலவி தெரிவித்தார். எம்.என்.சபியா 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தையும் எஸ்.மிப்ரா 6 பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று இரண்டமிடத்தையும் பெற்றுள்ளனர்.

கொத்மலை, பஹலகொறக்கோயா அல் அரபா மு.வித்தியாலயத்தில் பரீட்சைக்கு 22 மாணவர்கள் தோற்றி சகல பாடங்களுடன் 17 மாணவர்கள் உயர்கல்வியை கற்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக அதிபர் எம். சலிம் தெரிவித்தார்.

பரீட்சையில் எம்.எம்.எப். சஹ்ராஜிதா 8 பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வில்பத்து பிரகடனத்தால் முஸ்லிம்கள் ஏமாற்றம்

## அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி

வில்பத்து வடக்கில் அமைந்துள்ள பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதியை பாதுகாக்கப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதியினால் அவசரமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கை முஸ்லிம்களை ஏமாற்றத்துள்ளாக்கியுள்ளது. இதனை வாபஸ் பெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு அவர்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே முஸ்லிம்கள் இந்த ஜனாதிபதியையும் நல்லாட்சியையும் பதவிக்கு கொண்டு வருவதற்கு பிரயத்தனப்பட்டார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பு நிறைவேறியதாகத் தெரியவில்லை.

வில்பத்து தொடர்பாக எடுக்கப்படும் பிரசாரங்கள் பொய்யானவை என்றும் முஸ்லிம்கள் ஓர் அங்குலக் காணியைக் கூட அபகரிக்கவில்லை என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கும் நிலையில் உரிய ஆவணங்களுடன் பூர்வீகமாக வாழ்ந்து வந்த முஸ்லிம் தரப்பினருடன் எவ்வித கலந்துரையாடல்களோ, விசாரணைகளோ, இன்றி கடும் போக்காளர்களினதும், இனவாத கும்பல்களினதும், இனவாத ஊடகங்களினதும் விருப்பத்துக்கு ஏற்ப ஜனாதிபதி செயல்பட முனைந்திருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

உத்தேச பிரகடனம் தொடர்பாக எதிர்பார்ப்புகள் இருப்பின் இரு வாரங்களுக்குள்ளாகத் தெரிவிக்குமாறு முசலி பிரதேச செயலகம் தெரிவித்திருந்தும் அக்கால அவகாசம் முடிவதற்குள்ளாக ஜனாதிபதி நாடு திரும்பும் வரை பொறுத்திராது ரஷ்யாவில் இருந்துக் கொண்டே அவசரமாக இவ்வர்த்தமானி பிரகடனத்துக்கு கையெழுத்திட்டுள்ளமை திட்டமிட்ட சதி என்றே கருத வேண்டியுள்ளது.

ஆதலால் இந்த ஜனாதிபதியின் மூலமும் அரசாங்கத்தின் மூலமும் நீதியையும் விமோசனத்தையும் எதிர்பார்த்த முஸ்லிம்கள் ஏமாற்றத்துக்குள்ளாகி உள்ளார்கள். இதற்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். இந்த வர்த்தமானி அறிவித்தலை உடன் வாபஸ் பெற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முஸ்லிம்கள் வேதனைக்குள்ளாகிருக்கும் இவ்வேளையில் மேலும் 3000 ஏக்கர் காணி இதில் உள்ளடக்கப்படல் வேண்டும் என்று ஒரு பௌத்த அமைப்பால் விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கையும் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியுள்ளது. அதே நேரம் முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. இதற்கு தமது சம்மேளனத்தின் பூரண ஒத்துழைப்பு நிச்சயம் கிடைக்கும் எனவும் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை தொடர்பாக சம்மேளனம் அவசரமாக கூடி ஆராயவுள்ளதாகவும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசிய தலைவர் கலாநிதி பீ.எம் பாரூக் தெரிவித்தார்.

# பெறுபேறுகளில் முன்னேற்றம்; கல்வி அமைச்சர் பெருமிதம்



கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் வீதம் ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இம்முறை அதிகரித்துள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறினார். கணிதம் போன்ற பாடங்களில் சித்யடைந்தவர்களின் வீதம் இம்முறை உயர் மட்டத்தில் காணப்படுகின்றதென்று பரீட்சைகள் ஆணையாளர் தனக்கு அறிவித்ததாக கல்வியமைச்சர் கூறியுள்ளார். இந்த நிலைமை நாட்டின் கல்வித்துறையின் தரமான வளர்ச்சி தொடர்பில் நம்பிக்கையூட்டும் ஆரம்பம் என்று அவர் கூறியுள்ளார்.

வெளியான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இவ்வாறு கூறியுள்ளார்.

வருங்காலத்தில் நாட்டின் கல்வியில் பல்வேறு சீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், 13 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான கல்வியை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின் மாதிரியை இந்த ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அதனை 2019ஆம் ஆண்டு முதல் அனைத்து பாடசாலை கட்டமைப்பிலும் உள்ளடக்கும் விதமாக விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறினார்.

இது தவிர கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 175,000 மாணவர்களுக்கு டெப் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், அதனை முதலில் பெற்றுக் கொள்ளும் மாணவர்களாக, பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெற்ற மாணவர்களே காணப்படுவார்கள் என்றும் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கூறினார்.

## ஷம்ஸ் நவீத் சாதாரண தரத்தில் 9ஏ சித்தி

(கியாஸ் ஏ. புஹாரி)



சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவரான எஸ்.எம். ஷம்ஸ் நவீத் இம்முறை கா.பொ.த. சாதரணதர பரீட்சையில் 9ஏ சித்திகளை பெற்றுள்ளார். இம் மாணவன் எம்.எல். சலீம் - சர்மிலா தம்பதிகளின் புதல்வராவார்.

இப் பாடசாலையில் மேலும் 13 பேர் 9ஏ சித்திகளை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





ஒலுவில் அல்-மதீனா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையின் அதிபர் கே.எல். அமீர் தலைமையில் நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு கிழக்கு சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகணசபை உறுப்பினரும் இளைஞர் வேலைவாய்பு அமைச்சின் செயலாளருமான ஏ.எல்.எம். தவம் கௌரவ அதிதியாகவும், மற்றும் கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.வித்தியாலய அதிபர் கே.எல். அமீருக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் பொன்னாடை போர்த்துவதை படத்தில் காணலாம். இவ்விளையாட்டுப் போட்டியில் ஆயிஷா இல்லம் (பச்சை), ஹப்ஷா இல்லம் (நீலம்), சைனப் இல்லம் (மஞ்சள்) ஆகிய இல்லங்கள் பங்கு கொண்டதில் ஹப்ஷா இல்லம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (படம்- ஒலுவில் நிருபர்)

## கலாநிதி ஜாயாவின் பேத்தி ஆமினா காலமானார்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் முன்னாள் இணைச் செலாளருமான எம். எச். ஆமித்தின் பெறா மகள் திருமதி ஆமினா ஜாம்தீன் அப்துல் வவா (57) நேற்றுக் காலை ஸ்ரீ ஜயவர்தன வைத்தியசாலையில் காலமானார்.

இவர் தேசிய தலைவர் ரீ. பி ஜயா வினுடைய பேத்தியுமாவார். ஐக்கிய தேசியக் கட்சியின் மாதர் இயக்கத்தில் சேர்ந்து உழைத்த இவர், சுனேத்ரா ரணசிங்க அமைச்சராக இருந்த போதும் தெஹிவளை கல்கிஸை மேயராக இருந்த போதும் அவருடைய செயலாளராகக் கடமையாற்றினார். மக்கள் சேவையில் மிக விருப்புடனும் உறுதியுடனும் பணியாற்றியவர்.

மக்கள் அபிமானத்திற்கு உரித்தானவர். எந்த பிரச்சினையையும் உடன் தீர்த்து வைப்பதில் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

இவரது மறைவை முன்னிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஏ. எச் .எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மொழிமூல பயிற்சிகளை கல்வி அமைச்சு தொடராக வழங்கும்

## கல்விப் பணிப்பாளர் எம்.கே. பெரேரா

( புத்தளம் நிருபர் )

தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்குவதை கல்வி அமைச்சு ஒரு போதும் கைவிடாது. இது தொடர்பாக தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் கவலைப்பட தேவை இல்லை என்று கல்வி அமைச்சின் வணிக மற்றும் வணிகக் கல்வி கிளை ப்பணிப்பாளர் எம்.கே. பெரேரா தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு செடக் பயிற்சி நிறுவனத்தில் இரண்டு நாள் பயிற்சி பட்டறையொன்று நடைபெற்றது. திறன் அபிவிருத்தி என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த பயிற்சி பட்டறையின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பெரேரா இவ்வாறு தெரிவித்தார். கல்வி அமைச்சின் வணிக மற்றும் வணிகக் கல்வி கிளை அதிகாரி என். கண்ணதாசனின் தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சி பட்டறையில் இலங்கை மத்திய வங்கி பொருளியலாளர் எம்.கே.கேஸவராஜா, தேசிய கல்வி நிறுவக ஆலோசகர் கலாநிதி ஏ. சிவநேசராஜா, கொழும்பு பங்குச்சந்



தையை நிர்வாகி எம்.சிவானந்தன், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் என். உமாகாந்தன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

வணிக துறை கல்விப் பணிப்பாளர்கள், பிரதி கல்விப் பணிப்பாளர்கள், உதவி கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய வளவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இந்த பயிற்சி பட்டறையில் தொடர்ந்து கருத்து தெரிவித்த கல்விப் பணிப்பாளர் எம்.கே.பெரேரா,

தொழில் நுட்ப வளர்ச்சி கண்டுள்ள இந்தக் காலத்தில் மாணவர்கள் புதிய விடயங்களை பல வழிகளிலும் அறிந்து கொள்கின்றனர். மாணவர்களின் தேவைக்கேற்ப ஆசிரியர்களும் தயாராக வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதற்காகவே நாம் இவ்வாறன பயிற்சி பட்டறைகளை ஏற்பாடு செய்கின்றோம்.

உயர்தர பிரிவிற்கு நடாத்தப்பட்டது போன்று சாதாரண தர பிரிவிற்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது. க.பொ.த. சாதாரண தரத்தைத் தொடர்ந்து உயர்தரம் வரை கல்வி கற்கும் 13 வருட கட்டாயக் கல்வி திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் கூறினார்.

# பைசர் மக்கீன் என்றும் சமூக நலனுக்காக உழைத்தார்

## அஸ்வர் அனுதாபம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஜித்தாவின் இலங்கை கவுன்சிலராகக் கடமைப் புரிந்த பைசர் மக்கீன் என்றும் சமுதாய நலனுக்காக மிக அக்கறையோடு உழைத்தவர் என முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

பைசர் மக்கீன் மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலே இவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது,

பைசர் மக்கீனின் திடீர் மறைவு எம்மை எல்லாம் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. பைஸர் மக்கீனை சிறுவயது முதல் நான் நன்கறிவேன். அவருடைய தந்தை வழியில் தனது பொது வாழ்க்கை ஆரம்பித்த பைசர், சமுதாய நலனுக்காக வேண்டி மிகவும் அக்கறை கொண்டு உழைத்தவர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் எல்லோரையும் ஒன்று கூட்டி ஒரு சக்தி மிக்க அல்பியா என்ற இயக்கத்தை உருவாக்கினார். எந்த அரசாங்கம் பதவில் இருந்தாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களைக் கொண்டு வந்து வருடா வருடம் கொழும்பு கால்பேஸ் ஹோட்டலில் வெளிநாட்டுக்குச் செல்லுகின்ற மக்களுக்கு அடிக்கடி ஏற்படுகின்ற பல குறைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதில் அவர் மும்முரமாக உழைத்தார். தான் பிறந்த மண்ணாகிய பாணந்துறையில் மத சார்பான விடயங்களிலும் அவர் ஈடுபாடு கொண்டார்.

பள்ளிவாசலில் பொறுப்பு வாய்ந்தவராகவும் அவர் கடமை புரிந்து சமய சமூக வளர்ச்சிக்காக வேண்டி அரும்பாடுபட்டு உழைத்தார்.

அவர் வாழும் போது செய்த நல்லமல்களை வல்ல இறைவன் ஏற்று மேலான ஜன்னத்துல் பிர்தௌஸை வழங்குவானாக! என முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



இம்முறை வெளியான க.பொ.த (சா/த)பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலை கடந்த காலங்களை விடச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. இம்முறை அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகளையும் பாடசாலையின் அதிபர் ஏ.எம்.எம் நிசாத்தையும் படத்தில் காணலாம்.

(படம் - மல்வானை ஹனபி)

# கிண்ணியா வைத்தியசாலையை தரமுயர்த்தகோரி மக்கள் தொடர்ந்து போராட்டம்




(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பொது நல அமைப்புகளின் ஏற்பாட்டில் கிண்ணியா தள வைத்தியசாலையை ஏ தரத்திற்கு தரமுயர்த்தும் கவனயீர்ப்பு போராட்டம் இரண்டாவது (29)நேற்று நாளாகவும் பழைய வைத்தியசாலைக்கு முன்பாக தொடர்ந்து நடை பெற்று வருகின்றது.

இளைஞர்கள், சட்டத்தரணிகள்,உலமாக்கள்,பெண்கள் அமைப்புகள்,மாணவர்கள்,ஆசிரியர்கள்,முகநூல் நண்பர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

கிண்ணியா தள வைத்தியசாலையை தரமுயர்த்தி அதன் நிர்வாகத்தை மத்தியரசின் கீழ் கொண்டு வருமாறும் கோரி செவ்வாய்க் கிழமையும்( 28),புதன் கிழமை( 29)நேற்றும் இக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இவ் வைத்தியசாலையை தரமுயர்த்தி சிறந்த சேவையினை வழங்க வேண்டும் என இதன் போது கோரிக்கை விடுத்தனர்.

இவ் ஆர்ப்பாட்ட இடத்திற்கு கிண்ணியா பிரதேச செயலாள் எம்.ஏ.அனஸ் விஜயம் செய்திருந்தார்.

இவரிடம் இக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் இவ் ஆர்ப்பாட்ட அமைப்புகளினால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







சீனன்கோட்டை ஜாமியதுல் பாஸியது சாதுலியா கலாபீடத்தில் பட்டம் பெற்ற மாணவர்கள் 5 பேர் உயர் கல்வியைத் தொடர்வதற்கு புலமைப்பரிசில் பெற்று இந்தோனேஷியா இஸ்லாமிய பல்கலைக்கழகத்திக்குப் பயணமாகின்றனர். அவர்களுக்கான பயணச்சீட்டு கையளிக்கும் நிகழ்வு பாசியா பெரிய பள்ளிவாசலில் கடந்த திங்கட்கிழமை இரவு கலாபீட நிர்வாக சபைத் தலைவர் சட்டத்தரணி எம்.சீ.எம். ஹம்ஸா தலைமையில் நடைபெற்றது. பலஸ்தீனத் தூதுவர் பவ்ஸான் அன்வர், சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ராமிஸ் ஏ. கபூர்,பிரதித் தலைவர் எம்.எஸ்.எம். துகைன், உபதலைவர் எம்.எஸ்.எம். ரஸ்வி,அதிபர் மௌலவி எம்.ஏ.எம்.அஸ்மிகான் (முஜயதீன்), பேருவளை மருதானை தாருல் ஸஹ்ரா மகளிர் அரபிக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.ஐ.எம். பஸ்லான்( அஷ்ரபி),கலீபா மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி) உட்பட நிர்வாகிகள் உலமாக்கள், இஃவான்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(பேருவளை, பி.எம். முக்தார்)

# முடக்கப்படும் முஸ்லிம் மீள்குடியேற்றம்



இந்த நாட்டில் இடம்பெற்ற 30 வருட கால யுத்தத்தில் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டதொரு சமூகம் என்றால் அது நிச்சயமாக வட மாகாண முஸ்லிம் சமூகமேயாகும். 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதிப்பகுதியில் வடக்கில் உள்ள 5 நிர்வாக மாவட்டங்களையும் பிறப்பிடமாகக் கொண்ட ஏறத்தாள 12,000 குடும்பங்களைச் சேர்ந்த 80,000க்கும் அதிகமான முஸ்லிம்கள் ஒரே நாளில் இரவோடிரவாக பலாத்காரமாக வெறும் கைகளுடன் விடுதலைப் புலிகளினால் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டும் வெளியேற்றப்பட்ட துரதிஷ்டவசமானதும் துக்ககரமானதுமான வரலாறு நம் யாவருக்கும் தெரிந்ததே.

இந்த வெளியேற்றத்தினால் கடந்த 27 ஆண்டுகளாக இந்த மக்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகளை வெறும் வார்த்தைகளினால் விபரிக்க முடியாது. சொந்த நாட்டிலேயே அகதிகள் என்ற முத்திரை குத்தப்பட்டு அவர்கள் மிகவும் கீழ்த்தரமான ஒரு வாழ்க்கையினை அனுபவித்து வருகிறார்கள். புத்தளம், அனுராதபுரம், கம்பஹா, கொழும்பு போன்ற பல்வேறு மாவட்டங்களில் கல்வி, தொழில் வாய்ப்புகள், வியாபாரம், குடும்ப வாழ்க்கை, கலாசாரம் என்ற அத்தனையையும் இழந்து ஒரு அடிமைச் சமூகமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோது 19 ஆண்டுகளுக்கு பின்னர் தமது சொந்த பூர்வீக இடங்களுக்கு மீண்டும் சென்று குடியேறி வாழ்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதாக எண்ணி இவர்கள் மிகவும் அதிகமாக மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் நடந்ததோ வேறு. அன்றைய அரசாங்கம் தமிழ் மக்களின் மீள் குடியேற்றத்திற்கு கொடுத்த முன்னுரிமையில் ஒரு சிறிய அளவேனும் இந்த மக்களின் மீள் குடியேற்றத்தில் காட்டவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றே. இந்நாட்டின் அரசாங்கம் மட்டுமின்றி சர்வதேச சமூகமும் இம்மக்களின் மீள் குடியேற்றத்தில் எதுவித அக்கறையும் காட்டவில்லை. இந்த மக்கள் தொடர்ச்சியாக எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு வந்தார்கள். இவர்களது அடிப்படை மனித உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வந்தன. ஒரு வஞ்சிக்கப்பட்ட சமூகமாகவே இவர்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றார்கள். இன்றுவரை ஒரு மாற்றாந் தாய் மனப்பான்மையுடன்தான் இவர்கள் எல்லோராலும் நடத்தப்பட்டு வருவதானது மிகவும் வேதனை நிறைந்த விடயமாகும்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் அரசாங்கத்தையும் சர்வதேச சமூகத்தினையும் நம்பி ஏமாந்த இம்மக்கள் தாமாகவே தமது பிரதேசங்களில் மீள் குடியேறும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அப்போது தான் அவர்கள் சற்றும் எதிர்பாராத சில பிரச்சினைகளை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. குறிப்பாக வடமாகாணத்தில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முசலிப் பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களை சேர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் என்பது கேள்விக் குறியாக்கப்பட்டது. இவர்கள் மீள் குடியேறுவதற்கு முன்னரேயே 2012 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கம் இம்மக்கள் நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வந்த மறிச்சிக்கட்டி, கரடிக்குளி, பாலக்குளி போன்ற பிரதேசங்களை வனபாதுகாப்பு பிரதேசமாக பிரகடனம் செய்தது.

பாரம்பரியமாக முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த இந்தப் பிரதேசங்கள் இம்மக்களுக்கு தெரியாமலேயே வனபாதுகாப்பு பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டமையானது இம்மக்களுக்கு இந்நாட்டு அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட மிகப்பெரிய துரோகமாகும். ஏறத்தாள 22 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் நடமாட்டம் இல்லாது கைவிடப்பட்ட இந்தக் கிராமங்கள் இயற்கையாகவே காடாகி இருக்கும் என்பதில் எதுவித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் உரிமையாளர்கள் இருக்கும் போது அந்த நிலங்கள் காடாகி பெரும் வனமானால் கூட அவர்களின் அனுமதியின்றி அதனை வனப்பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனம் செய்ய எந்தவொரு அரசாங்கத்திற்கும் அனுமதி இல்லை.

புதிதாக இந்த நாட்டில் உருவாகியுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான சில இனவாத அமைப்புகள் சில சர்வதேச சக்திகளின் பின்புலத்துடன் இந்த மக்களை தமது பாரம்பரிய பிரதேசங்களில் குடியேறுவதை தடுக்கின்ற முயற்சியில் ஈடுபட்டதன் விளைவே இதுவாகும். இது விடயத்தில் பல்வேறு முஸ்லிம் எதிர் அமைப்புகள் ஒன்று சேர்ந்து செயல்படுகின்றமை இன்று தெட்டத்தெளிவாகியுள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளின் கூட்டு முயற்சியாகவே இது இடம்பெறுகின்றது. மேலும் இந்த முசலிப் பிரதேச மக்களின் மீள் குடியேற்றத்தினால் வில்பத்து வனம் அழிக்கப்படுவதாக ஒரு பொய்யான பிரசாரத்தை இனவாத ஊடகங்கள் மூலம் இவர்கள் பரப்பி இந்நாட்டின் முஸ்லிம்கள் இயற்கை வனங்களை அழித்து முழு மனித சமுதாயத்திற்கும் அழிவினை கொண்டு வருபவர்கள் என்ற ஒரு மோசமான எண்ணத்தினை ஏனைய சமூகத்தினர் மத்தியில் உருவாக்கி வருகின்றனர். தமது பாரம்பரிய பிரதேசங்களை மீட்டு இம்மக்கள் மீள் குடியேற முயற்சிக்கும் இவ்வேளையில் மற்றுமொரு பாரிய இடியொன்று இந்த மக்களின் தலையிலே இறங்கியுள்ளது. அதாவது கடந்த 24 ஆம் திகதி இந்த நாட்டின் நல்லாட்சியின் ஜனாதிபதியானவர் கடந்த கால சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் சிகரம் வைப்பது போல 400,030.525 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்ட மாவில்லு, வெப்பல், கரடிக்குளி, மறிச்சுக்கட்டி, விளாத்திக்குலம் மற்றும் பெரிய முறிப்பு ஆகிய ஒதுக்குக் காடுகளுக்கு உரித்தான காட்டுப் பிரதேசத்தை 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து மாவில்லு பேணற் காடு என உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த செயற்பாடானது 1990 ஆம் ஆண்டு ஆயுதமுனையில் இம்மக்களை பலாத்காரமாக வெளியேற்றிய பயங்கரவாத புலிகளின் செயலுக்கு எதுவிதத்திலும் குறைந்தவொன்றல்ல. மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பிரதேசங்களை காடுகளுக்கு உரித்தான பிரதேசமாக பிரகடனம் செய்தமையானது அம்மக்களின் அடிப்படை உரிமையினை மீறிய செயலாகும். அது பயங்கரவாதம் என்றால் இது அரச பயங்கரவாதமாகும். அவர்கள் ஆயுத முனையில் செய்த வேலையினை ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட தலைவர் ஒருவர் பேனா முனையால் செய்து முடித்துள்ளார். அவர்கள் கலைத்தார்கள் இவரோ மீண்டும் குடியேறாமல் தடுக்கின்றார். இது இரண்டிற்கும் என்ன வித்தியாசம் உள்ளது? இந்த ஜனாதிபதியின் செயலானது முழுக்க முழுக்க பக்க சார்பானது ஆகும். இவரை தெரிவு செய்த இந்த மக்களுக்கு இவரால் இழைக்கப்பட்ட மிகப் பெரிய அநீதியாகும்.

இந்த முசலிப் பிரதேச மக்களுக்கு எதிரான செயலானது சர்வதேச சட்டங்களையும் உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்கள் தொடர்பான விதிகளையும் மீறுகின்ற ஒரு செயலாகும். உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் தொடர்பான நெறிமுறை விதிகள் 28, 29 மற்றும் 30 என்பவற்றை மீறியதொரு செயலாகவே தற்போதைய ஜனாதிபதி செய்துள்ள வேலை அமைந்துள்ளது.

இத்தனை விடயங்கள் இம்மக்களுக்கு எதிராக நடந்தேறியுள்ள போதிலும் எமது முஸ்லிம் அரசியல்வாதிகளோ அல்லது கட்சிகளோ அல்லது சிவில் அமைப்புகளோ இது பற்றி பேசாமலும் உரிய நடவடிக்கை எடுக்காமலும் இருப்பதானது மிகவும் வேதனையானதொரு விடயமாகவே உள்ளது. இந்தப் பிரச்சினையினை ஒரு பகுதியில் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினை என்றோ அல்லது ஒரு சில அரசியல் தலைமைகளின் பிரச்சினை என்றோ நாம் கை விட்டுவிட முடியாது. இது ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் எதிராக இந்த நாட்டின் இனவாத சக்திகளினால் இழைக்கப்பட்டதொரு அநீதியாகும். இதனை ஜனநாயக ரீதியாக எதிர்த்துப் போராடி, இடம் பெயர்ந்து பல ஆண்டுகளாக அல்லலுற்று வாழும் எமது சமூகத்தின் ஒரு பகுதியினராகிய இம்மக்களின் உரிமைகளை வென்று கொடுப்பது முஸ்லிம்களாகிய நம் ஒவ்வொருவரினதும் கடமையுமாகும்.

எனவே எமது குறுகிய அரசியல் இலாபங்கள் மற்றும் இயக்க வேறுபாடுகளை மறந்து எமது சகோதரர்களாகிய இந்த மக்களின் துயர் துடைக்க எல்லா விதத்திலும் நமது பங்களிப்பினை வழங்குவது நம் யாவரினதும் தார்மீகக் கடமையும் சமூகக் கடமையுமாகும்.

**வன்னி மைந்தன்**



(கடந்த 23ஆம் திகதியின் தொடர்)

# மோதலின் மூலம் பாதிப்படையாத ஒருவர் கூட இல்லை

விரிவுரையாளர்

**கல்கந்தே தம்மானந்த தேரர்**



பௌத்த மத ரீதியாகக் கதைக்கும்போது தேரர்கள் என்ற வகையில் எம் மத்தியில் பாரதூரமான வகையில் ஓர் அதிர்ச்சி ஏற்படல் வேண்டும். இலங்கையில் பாரிய மனிதப் பேரழிவு இடம்பெற்றது. 71ல் மாத்திரமல்ல அதன் பின்னர் 87 - 89 காலப்பகுதிகளில் மரணித்தவர்கள் எண்ணிக்கை ஏராளம். 71 கிளர்ச்சியில் 20000 என்று சொல்கின்றனர். 87 - 89 காலப்பகுதியில் 60000 என்று கூறுகின்றனர். புள்ளிவிபர ரீதியில் இது எவ்வளவு தூரம் சரியானதென எனக்குத் தெரியாது. ஆயினும் பாரியளவு இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. அரந்தலாவைப் படுகொலையில் 31 பேர் கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டபோதும், அரந்தலாவைப் படுகொலை இடம்பெற்று சில மாதங்களின் பின்னர் 87 ஆரம்பிக்கப்பட்டது. 90ஆம் ஆண்டளவில் சுமார் 1000 பிக்குகள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என நான் நினைக்கின்றேன். இது எமது நினைவுகளை விட்டுப் பிரிந்துள்ளது. 700 அல்லது 600 அல்லது 5000 பேர் என்று நினைப்போம். டயர்களில் எத்தனை பேர் எரிக்கப்பட்டார்கள்? அதன் பின் இக்கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இதில் எமக்குரிய ஒரு வகிபாகம் இல்லையா? இதில் பாதிக்கப்பட்டவர்களாகவா அல்லது இதன் மத்தியில் சென்று இதனை மாற்றுவதற்காக, இன்றேல் நடப்பது நடக்கட்டும் என்று அதன் பயன்களை அனுபவிப்பதற்காக நாம் இருக்கிறோம், இதன் மத்திக்குச் சென்று நாம் சிந்திக்கும் விதத்தை மாற்ற வேண்டுமென்று நான் நினைக்கின்றேன். இதனை மாற்றுவதற்கான உமது தலையீடு காணப்படுகிறது. முற்காலத்தில் பௌத்த மதத்தை பாதுகாப்பது தொடர்பில் பிரச்சினை காணப்பட்டது என நான் நினைக்கின்றேன். தேரவாத பௌத்தத்திற்கு போட்டியாக மஹாயான பௌத்தம் மேல் எழுகிறது. மத ரீதியான நிவாரணம் இல்லாத ஒரு நிலைமையின்கீழ் மதத்தைப் பாதுகாத்தல். அவ்வாறே நூல்களைப் பாதுகாத்தல் இடம்பெற்றது. ஆயினும் தற்போது இப்பிரச்சினைகள் எதுவும் இல்லை. திரிபிடகத்தை எவராலும் அழித்துவிட முடியாது. அது இணையத்தளத்தில் காணப்படுகிறது. இறுவட்டுகளிலும் உள்ளது. உலகில் கற்றறிந்த மனிதர்கள் மத்தியில் இவ் அறிவு காணப்படுகிறது. தொடர்ந்தும் இதில் பாதிப்பை ஏற்படுத்த எவராலும் முடியாது. உண்மையில் அதைப் பாதுகாக்கும் கடமை எம்மிடத்தில் இல்லை. இவ் அறிவை அடிப்படையாகக் கொண்டு அதனை வழங்குவதே எமது பணியாகும்.

தேரர்களான எம்மீது பாரியதொரு பொறுப்பு உள்ளது. இனம் என்பதை விடுத்து மனித இனம் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதில்தான் உண்மையிலேயே சிங்கள இனம் பாதுகாக்கப்படுகிறது. மனித வர்க்கத்தின் நன்மைக்காகவே என தேரர்கள் சிந்திக்கும் பொழுது சிங்கள இனம் நிர்க்கதியாகமாட்டாது. உண்மையிலேயே சிங்கள இனத்தைப் பாதுகாக்க முயலும் போதே சிங்கள இனம் நிர்க்கதிக்குள்ளாகிறது.

ஆகவே மத ரீதியாக இதில் தலையிடுவதற்கு பொதுவாக அனைத்து மதங்களுக்கும் பாரியதொரு கடமைப்பொறுப்பு உள்ளது. உதாரணமாக பௌத்தர்கள் என்ற ரீதியில் ஏதேனுமொரு உன்னத கருமத்திற்காக பௌத்த நிறுவனங்களுக்கு நாம் உதவிகளை செய்கின்றோம். மைத்திரி தியானத்தில் எதிரிகளுக்கும் கருணை காட்ட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. கடந்த காலம் பூராக மரணித்த அனைத்து மனிதர்களுக்காக எம்மால் பிரார்த்தனை செய்ய முடியுமாயின் அது சிறந்த ஒரு செயல் ஆகும். அவர்கள் தமிழர்களாக இருக்கலாம், புலிகளாக இருக்கலாம், இராணுவ வீரர்களாக இருக்கலாம். இவை அனைத்தும் அவர்களை அழைக்கும் பெயர்கள் மாத்திரமே. இங்கு மனிதர்களே மரணித்துள்ளார்கள். இவ் அனைத்து மனிதர்களுக்குமாக பிரார்த்திப்போமாயின் அங்கு அமர்ந்திருக்கும் மனிதனின் மனதில் பாரியதொரு மாற்றம் ஏற்படும். அதனை எமக்குச் செய்ய முடியும். இதற்கு ஐந்து சதமேனும் செலவாகாது. இதன் மூலம் மனிதன் இருக்கும் இடத்திலிருந்து அவனை மேலே உயர்த்த முடியும். ஆயினும் நாம் எமது வரலாற்றுக் கதைகளைச் செய்கின்றோம். இதன்மூலம் நாம் மனிதர்களைக் கொண்டு செல்வது, கருணை காட்டும் செயற்பாட்டுக்கு அல்ல. இதனுள் நாம் எம்மை வரையறுக்கின்றோம். மனோபாவ மாற்றம் அவசியம் என நான் எண்ணுகின்றேன். மனிதர்கள் சிந்திக்கும் விதம் மாற்றமடைய வேண்டும். இது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது மேற்கொள்ளும் ஒரு பணி அல்ல. இது நாட்டு மக்களின் மனங்களில் உருவாக வேண்டிய ஒன்றாகும்.

**அதிகாரத்திற்கான தந்திரோபாயம்**

இறுதியாக இவை அனைத்திற்கும் மேலாக அரசியல்வாதிகளிடமும் பாரியதொரு கடமைப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள போதும், நான் அதுபற்றிக் கதைக்க விரும்பவில்லை. ஏனெனில் பொறுப்புள்ள அரசியல்வாதிகளைக் காணமுடியவில்லை. இது ஒரு மோசமான நிலைமை ஆகும். அவ்வாறான அரசியல்வாதிகள் எமது நாட்டில் அரிதாகவே உள்ளனர். நான் ஏதாவதொரு கட்சியையும் பற்றிக் கதைக்கவில்லை. எம் மத்தியில் இருக்கும் அரசியல்வாதிகள் சுயநலவாதிகளாக, தூரசிந்தனையற்ற, வியாபார சிந்தனையுள்ள, அதாவது பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டவர்களாக உள்ளனர். போதியளவு மதுபானசாலைகள், பணம் சம்பாதிக்கும் வழிகள் காணப்படலாம். அவைகள் இன்றி எவ்வாறு ஒரு நாட்டை முன்னேற்றுவது போன்ற பாரியளவு சிந்தனைகள் அவர்களிடத்தில் இல்லை. எமக்கு இருப்பது கிராமிய மட்டத்திலான குண்டர்கள் (சண்டியர்கள்) ஆவார்கள். இவ்வாறான பாரியதொரு பணியைச் செய்யக் கூடிய ஒரு தொலைநோக்கு அவர்களிடம் உள்ளதா? என்பது சந்தேகம்தான். இங்கு சொல்லப்படும் விடயங்கள் அவர்களுக்குப் புரிகிறதா, அவ்வாறு செயற்படுவார்களா? ஆயினும் இது மிகவும் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஆகும். தற்போது இந்த அரசாங்கம் ஒருசில நடவடிக்கைகளை மேற்கொள்வதை அவதானிக்க முடிந்தாலும் வரலாறு பூராகவும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தொடர்ந்தும் இப்பிரச்சினையை அவர்கள் பயன்படுத்தக் கூடியதாயிருந்தது. இதன் விளைவாக இவ்வளவு தூரம் பாரியதொரு இழப்பினை நாம் சிந்திக்க நேர்ந்தது. நாடு என்ற வகையில் ஏனைய உலக நாடுகள் முன்னேறிச் செல்லும் வேளை நாம் எவ்வளவு தூரம் பின்னோக்கிச் சென்றுள்ளோம். இதற்குக் காரணம் நாம் தூரநோக்கோடு செயற்படாமை ஆகும்.

ஏனெனில் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் இதைக் குழப்புகிறார்கள். ஒருசாரார் பயணம் மேற்கொள்ள முயலும்போது மற்றைய சாரார் அதைக் குழப்புகின்றனர். இதுவே தொடர்ந்தும் இடம்பெற்றது. அதிகாரத்தில் உள்ள கட்சி ஏதாவதொன்றைச் செய்ய முயலும்போது அதிகாரத்தில் இல்லாதவர்கள் அதைக் குழப்புகின்றனர்.

தற்போதும் அவ்வாறே நிகழ்கிறது. இதன்மூலம் எந்தவொரு பயனும் கிடைக்குமென நான் நினைக்கவில்லை. ஏனெனில் எப்போது மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமென அதிகாரத்தில் இல்லாதவர்கள் பேராசை பிடித்தவர்களாக எதிர்பார்த்தவண்ணமுள்ளார்கள். ஆகவே உண்மையில் இந்த சந்தர்ப்பமானது ஏனைய சந்தர்ப்பங்களைவிட புத்தி சாதுர்யமாகப் பணியாற்ற வேண்டிய ஒரு சந்தர்ப்பம் என நான் நினைக்கின்றேன்.

காரணம் இதற்காகச் செலவு செய்யப்பட்டவை மிகப் பாரதூரமானதாகும். ஆகவே இனவாதத்தைத் தூண்ட மாட்டோம் என இச் சந்தர்ப்பத்தில் இதனை விட புத்திசாதுர்யமாக இணக்கப்பாட்டிற்கு வரமுடியுமாயின் சிறந்தது.

மற்றையது அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் மீண்டுமொருமுறை குழப்பாமல் இருக்க முடியுமாயின் அது பாரியதொரு காரியம் ஆகும். இப்பொறுப்பு நம்மிடம் உள்ளது.

# நேரம் கூடி வரும்போது நிச்சயம் அங்கு வருவேன்

## இலங்கை ரசிகர்களுக்கு ரஜினி கடிதம்



(திருச்சி சாஹுல் ஹமீது)

நேரம் கூடி வரும் போது இலங்கைக்கு நிச்சயம் வருவேன் என இலங்கை ரசிகர்களுக்கு, நடிகர் ரஜினிகாந்த் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு கட்டப்பட்டுள்ள இலவச வீடுகளை வழங்கும் விழாவில், நடிகர் ரஜினிகாந்த் பங்கேற்பதாக இருந்தது. ஆனால், தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக இலங்கை பயணத்தை அவர் ரத்து செய்தார். இதனை தொடர்ந்து ஏமாற்றமடைந்த இலங்கை ரசிகர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தில் ரஜினி ரசிகர்கள் ஊர் வலம் நடத்தினர். இந்நிலையில் இலங்கையிலுள்ள தமது ரசிகர்களுக்கு நடிகர் ரஜினிகாந்த் உருக்கமான கடிதமொன்றை எழுதியுள்ளார்.

"இலங்கை ரசிகர்கள் தம் மீது வைத்துள்ள அன்பிற்கு நன்றி தெரிவிக்க தம்மிடம் வார்த்தைகள் இல்லை என்று அக்கடிதத்தில் கூறியுள்ளார். நேரம் கூடி வரும் போது இலங்கைக்கு நிச்சயம் வந்து ரசிகர்களை சந்திப்பேன் என தெரிவித்துள்ளார். இலவச வீடுகளை ஒப்படைக்க எதிர்வரும் 9ஆம் திகதி ரஜினி, இலங்கைக்கு வருகைத்தரவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைகோர்க்கும் ஜோர்தான் – சவூதி அரேபியா: 15 பொருளாதார ஒப்பந்தங்கள் கைச்சாத்து



ஜோர்தான் மற்றும் சவூதி அரேபியா நாடுகளுக்கிடையில் 15 பொருளாதார ஒப்பந்தங்கள் திங்கள்கிழமை கையெழுத்தாகின.

சவூதி மன்னர் சல்மான் மற்றும் ஜோர்தான் மன்னர் அப்துல்லா ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இதுகுறித்து ஜோர்தான் அரசின் செய்தி நிறுவனமான பெட்ரா தெரிவித்துள்ளதாவது:

சவூதியின் அரசு மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், ஜோர்தான் அரசுடன் இணைந்து 15 பொருளாதார ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர். அதில், இருநாடுகளும் இணைந்து ஜோர்டானில் ரூ.20,000 கோடி மதிப்பிலான முதலீட்டை மேற்கொள்ளும் திட்டங்களும் அடங்கும்.

ஜோர்தானின் கிழக்கு எல்லைப் பகுதியில் மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல், வடக்கு - தெற்கு நெடுஞ்சாலையை மறுசீரமைத்தல் உள்ளிட்ட திட்டங்களும் அந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன என்று அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜோர்தானின் மிக நெருங்கிய பொருளாதார நட்பு நாடாக சவூதி அரேபியா திகழ்கிறது.

வேலையின்மை மற்றும் பொதுக் கடன் அதிகரிப்பு பிரச்சினைகளால் ஜோர்தானின் பொருளாதாரம் நெருக்கடியை சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

### ரஷ்ய ஜனாதிபதி புடின் - ஈரான் ஜனாதிபதி சந்திப்பு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரௌஹானி மாஸ்கோவில் செவ்வாயன்று சந்தித்துப் பேசினார்.

ரௌஹானி ரஷ்ய பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை. பயங்கரவாதம் உள்ளிட்ட சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் பேசியதாக ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்தது.

இந்த சந்திப்பின்போது, ரஷியா - ஈரான் இடையே பல பொருளாதார உடன்படிக்கைகள் கையெழுத்தாக உள்ளன. 20 அணு உலைகளை அமைக்க ஈரான் திட்டமிட்டுள்ளது. அதில் 9 அணு உலைகளை ரஷ்யா அமைக்கவுள்ளது. ஏவுகணைத் தடுப்பு ஆயுதங்கள், போர் விமானங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு தளவாடங்களை ரஷ்யா வழங்குவது குறித்து அறிவிப்பு வெளியாகும் எனத் தெரிகிறது.

கடந்த 6 ஆண்டுகளாக உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட சிரியாவின் நெருங்கிய நட்பு நாடுகளான ரஷ்யா, ஈரான் தலைவர்களின் சந்திப்பு, அந்நாட்டு அரசியலில் முக்கியத் திருப்பத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.



விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து சென்னை மெரினாவில் இளைஞர்கள் கடலில் இறங்கி போராட்டம் மேற்கொண்டனர். ''விவசாயிகளை பாதுகாப்போம் தண்ணீரை பாதுகாப்போம்' என முழங்கியபடி கடலில் இறங்கி இளைஞர்கள் ''வாடிவாசலை திறக்க போராடிய நாம் நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மூடவும் போராட்டம் நடத்த வேண்டும்'' என முழக்கமிட்டனர். இதனையடுத்து தடியடி நடத்தி இளைஞர்களை கலைந்தோடச் செய்துள்ளனர்.

# வெள்ளை மாளிகைக்கு சீல்: மர்ம பெட்டியால் பதற்றம்



அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அருகே சந்தேகத்திற்கு இடமான மர்ம பெட்டியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதால் வெள்ளை மாளிகைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது. மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய மர்ம நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து உடனடியாக வெள்ளை மாளிகைக்கு சீல் வைக்கப்பட்டது. அமெரிக்கா இரகசிய பொலிஸ் பிரிவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதற்கு பொதுமக்கள் மற்றும் ஊடகங்களை சற்று தொலைவிற்கு அப்பால் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தினர்.

இதனிடையே மர்மமான பெட்டி அகற்றப்பட்டதோடு, இந்த சம்பவம் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கலிபோர்னியாவை சேர்ந்த அவர் கையில் தண்டாயுதம் போன்ற ஒன்றை வைத்துக் கொண்டு அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டிருந்தார். அவரை பொலிஸார் பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தின் போது ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி மிக்கி பென்ஸ் ஆகியோர் வெள்ளைமாளிகையின் உள்ளே இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தரையிறங்கும்போது தீப்பற்றிய விமானம்; மயிரிழையில் உயிர்தப்பிய 141 பயணிகள்



பெருவில் பயணிகள் விமானமொன்று தரையிறங்கும் போது இறக்கைகளில் தீப்பிடித்து விபத்து ஏற்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பெருவில் ஜாவுஜா நகரிலிருக்கும் அண்டூன் விமான நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் மாலை உள்ளூர் நேரப்படி 4.30 மணிக்கு தலைநகர் லிமாவிலிருந்து 141 பயணிகளுடன் வந்த போயிங் ரக விமானம், விமான நிலைய ஓடுபாதையில் தரையிறங்க வானிலிருந்து கீழ் நோக்கி வந்தது. ஆனால், தரையிறங்க முயற்சிக்கும்போது திடீரென ஏற்பட்ட கோளாறு காணமாக ஓடுபாதையின் வலது புறத்தை நோக்கி விமானம் தாறுமாறாக சென்றது.

விமானத்தை ஓடுபாதையில் நிறுத்த முடியாமல் விமானி திணறிய நேரத்தில், விமானத்தில் இருந்த பயணிகள் பயந்து கூச்சலிட்டனர். இதையடுத்து, திடீரென விமானத்தின் இறக்கைகளில் இருந்து கரும்புகை வெளியேறியதுடன் தீபற்றி எரியத் தொடங்கியது. பின்னர், தானியங்கி தொழில்நுட்பம் மூலம் விமானம் கட்டுப்படுத்தப்பட்டு ஓடுபாதையில் இருந்து விலகிச்சென்ற நிலையில் நிறுத்தப்பட்டது.

விமானநிலையத்திலிருந்த தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ உடனடியாக அணைக்கப்பட்டது. மேலும், பயணிகள் பாதுகாப்பாக விமானத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். விமானத்தில் தீப்பிடித்தது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# குழந்தைக்கு 'அல்லாஹ்' என பெயர் அங்கீகரிக்க அமெரிக்க அரசு மறுப்பு

## எதிர்த்து பெற்றோர் வழக்கு




தங்களின் பெண் குழந்தைக்கு ''அல்லாஹ்'' என்று பெயரிடுவதை தடுத்தது தொடர்பாக அமெரிக்காவிலுள்ள ஜோர்ஜியா மாநில தம்பதியர் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

22 மாதமாகும் இப்பெண் குழந்தைக்கு பிறப்பு சான்றிதழ் வழங்க ஜோர்ஜியா மாநில பொது சுகாதாரத் துறை மறுத்துள்ளது.

தங்கள் குழந்தைக்கு அதிகாரபூர்வமான பெயர் இல்லாமலிருப்பது தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்று குழந்தையின் பெற்றோரான எலிசபெத் ஹாண்டி மற்றும் பிலால் வாக் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இதுகுறித்து கருத்து தெரிவித்த அரசு அதிகாரிகள், ஜோலிகா கிரேஸ்புல் லோரைனா அல்லாஹ் என்ற குழந்தையின் பெயரிலுள்ள குடும்பப் பெயர் ஹாண்டி, வாக் அல்லது இரண்டும் சேர்ந்த கலவையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

அரபு மொழியில் இறைவன் என்பதற்கு 'அல்லாஹ்' என்று பொருளாகும்.

'அல்லாஹ்' என்ற பெயர் புனிதமாக இருப்பதால், குழந்தைக்கு அப்பெயரை தாங்கள் சூட்டியதாக குழந்தையின் தந்தை தெரிவித்துள்ளார்.

''இது முற்றிலும் நியாயமற்றது மற்றும் எங்களின் உரிமைகளை மறுக்கும் அத்துமீறலாகும்'' என்று தங்கள் குழந்தைக்கு வைக்கப்பட்ட பெயரை அங்கீகரிக்க அரசுத்துறை மறுத்துள்ளது குறித்து குழந்தையின் தந்தையான வாக் தெரிவித்தார்.

ஆனால், பொது சுகாதாரத்துறையின் வழக்கறிஞர்கள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில், ''ஜோர்ஜியா சட்ட விதிகளின்படி, பிறப்பு சான்றிதழில் குழந்தையின் பெயருடன் வரும் குடும்பப் பெயரில் தந்தை அல்லது தாயின் பெயர் இருத்தல் அவசியம்'' என்று தெரிவித்துள்ளனர்.

# மேற்கு மொசூல் இராணுவ நடவடிக்கையில் பொதுமக்கள் 300 பேர் உயிரிழப்பு



ஈராக்கின் மேற்கு மொசூல் நகரை கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையில் 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாக ஐ.நா.தெரிவித்துள்ளது.

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மேற்கு மொசூல் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். அதனை மீட்பதற்காக கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இராணுவம் அதிரடி தாக்குதல்களை நடத்தி வருகிறது. அவர்களுக்கு உதவியாக அமெரிக்கா தலைமையிலான சர்வதேச கூட்டுப் படையும் விமான தாக்குதல் நடத்துகிறது. இத் தாக்குதலின்போது தீவிரவாதிகள் மட்டுமின்றி, பொதுமக்கள் தரப்பிலும் அதிக அளவிலான உயிர்ப்பலி ஏற்படுகிறது.

இப் போர் காரணமாக கடந்த ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 2 இலட்சம் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் 6 இலட்சம் மக்கள் ஐ.எஸ். கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்கு மொசூல் நகரை கைப்பற்றுவதற்காக இராணுவம் தாக்குதலைத் தொடங்கிய தினமான பெப்ரவரி 17ஆம் திகதியிலிருந்து மார்ச் 22ஆம் திகதி வரையில் 307 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், மார்ச் 23 முதல் 26 வரை 95 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியிருப்பதாகவும், அந்த தகவல் சரிபார்க்கப்பட்ட பின்னர், பலி எண்ணிக்கை 400ஐத் தாண்டும் எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் உயிரிழப்பு தொடர்பாக ஈராக் மற்றும் அமெரிக்க பாதுகாப்புத் துறை விசாரணை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளது. இதனை வரவேற்றுள்ள ஐ.நா. மனித உரிமைகள் தலைவர் உசைன், எந்த குறிப்பிட்ட மரணங்களுக்கும் கூட்டுப்படையை நேரடியாக தனது அலுவலகம் குற்றம் சாட்டவில்லை என்று கூறினார். அதேசமயம், பொதுமக்கள் பாதிப்பை குறைப்பதற்கான வழிமுறைகளை அவசரமாக ஆராய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன்படுத்துவதால் உயிர்ப்பலி அதிகமாவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் கடிதத்தில் பிரித்தானிய பிரதமர் கையெழுத்து



28 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் முடிவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் கடிதத்தில் பிரித்தானிய பிரதமர் தெரேசா மே கையொப்பமிட்டார்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள நாடுகள் தங்கள் சமூக, பொருளாதார வளர்ச்சியை கருத்தில் கொண்டு ''ஐரோப்பியஒன்றியம்'' என்ற கூட்டமைப்பை உருவாக்கின. 1993ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரான்ஸ், ஜெர்மன், பெல்ஜியம், பிரித்தானியா, இத்தாலி, டென்மார்க், போர்த்துகல் உள்ளிட்ட 28 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இதிலுள்ள நாடுகள் தங்கள் நாட்டின் எல்லைகளை பிற உறுப்பு நாடுகளுக்கு திறந்து வைத்துள்ளன. இந்த அமைப்பின் கடைசி உறுப்பு நாடாக 1-7-2013 அன்று குரோசியா சேர்க்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் வசிப்பவர்கள் அவ் அமைப்பிலுள்ள எந்தவொரு நாட்டுக்கும் சென்று வாழலாம்; வேலைவாய்ப்புகளை பெறலாம்; கல்வி கற்கலாம்; தொழில் தொடங்கலாம். இதன் காரணமாக ஐரோப்பா கண்டத்திலுள்ள பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் பிரித்தானியாவில் அதிக அளவில் குடியேற தொடங்கினார்கள்.

இதனால் தங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக, குறிப்பாக வேலைவாய்ப்பு பறிபோவதாக பிரித்தானிய மக்கள் கருத தொடங்கினார்கள். பிரித்தானிய அரசு வழங்கும் சமூக நலத்திட்டங்களின் பலன்களை பிறநாட்டினர் பெற்று விடுவதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிப்பதால் பிரித்தானியாவுக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதாகவும், எனவே அதிலிருந்து விலக வேண்டும் என்றும் அந்நாட்டில் கோரிக்கை எழுந்தது. இந்த கோரிக்கை நாளுக்குநாள் வலுவடைந்து வந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிப்பதா? வேண்டாமா? என்பதை அறிய மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கை பிரித்தானியா முழுவதும் எழுந்தது. பிரதமர் டேவிட் கெமரூனின் கன்சர்வேட்டிவ் கட்சி தரப்பிலும் பொதுவாக்கெடுப்பு நடத்த நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து, பொதுவாக்கெடுப்பு நடத்த பிரித்தானிய அரசு முடிவு செய்தது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவதை அதன் நட்பு நாடுகள் விரும்பவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகக்கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல், சீன ஜனாதிபதி ஜின்பிங் மற்றும் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்கள் பிரித்தானியாவை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், ஏற்கனவே திட்டமிட்டபடி ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிப்பதா? அல்லது விலகுவதா? என்பது பற்றி தீர்மானிக்க பிரித்தானியாவில் கடந்த ஆண்டு ஜுன் மாதம் பொதுவாக்கெடுப்பு நடைபெற்றது. பிரித்தானிய குடியுரிமை பெற்ற 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த பொதுவாக்கெடுப்பில் கலந்து கொண்டு வாக்களித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என 48.1 சதவீதம் மக்களும், விலக வேண்டும் என 51.9 சதவீதம் மக்களும் வாக்களித்தனர். மக்களின் இந்த முடிவு தனது எண்ணத்துக்கு பாதகமாக அமைந்ததால் வாக்கெடுப்பின் முடிவுகள் வெளியானதும் அந்நாள் பிரதமர் டேவிட் கெமரூன் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதையடுத்து, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானிய விலக வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவரது அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த தெரசா மே நாட்டின் புதிய பிரதமராக பதவி ஏற்றார். மக்களின் தீர்ப்பு தொடர்பாக பாராளுமன்ற இரு அவைகளில் காரசாரமான விவாதமும் நடைபெற்றது. பின்னர், மக்கள் தீர்ப்பை ஏற்று கொள்வது என பாராளுமன்றம் சமீபத்தில் தீர்மானித்தது.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் முடிவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் கடிதத்தில் பிரித்தானிய பிரதமர் தெரசா மே நேற்றுமுன்தினம் கையொப்பமிட்ட புகைப்படங்களை அந்நாட்டு ஊடகங்கள் தற்போது வெளியிட்டுள்ளன.

புருசெல்ஸ் நாட்டிலிருக்கும் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தலைவரான டொனால்ட் டஸ்க் என்பவரிடம் முறைப்படி இந்த கடிதம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கோட்டை புகையிரத நிலையத்தை தாக்கியவருக்கு 20 வருட சிறை

2008 ஆம் ஆண்டு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் தற்கொலைக் குண்டு தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்ட குற்றவாளி ஒருவருக்கு கொழும்பு விஷேட மேல் நீதிமன்றத்தால் 20 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

கொழும்பு விஷேட மேல்நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்கவினால் குறித்த தீர்ப்பு நேற்றையதினம் வழங்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் இந்த தாக்குதலை நடத்தியிருந்ததுடன், இத்தாக்குதலில் கொழும்பு டீ.எஸ். கல்லூரியின் 8 மாணவர்கள் உள்ளிட்ட 12 பேர் உயிரிழந்திருந்தனர். அதன்படி குண்டு ஒன்றை வெடிக்கச் செய்வதற்கு திட்டமிடல், அதற்கு உடந்தையாக இருத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களில் குற்றவாளியான கனகசபே தேவதாசன் என்ற தமிழர் ஒருவருக்கே இத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

## ஊடகவியலாளர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நிதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகியோரே இக்குழுவின் அங்கத்தவர்களாவர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சிபாரிசில் இந்த உபகுழுவை நியமிப்பதற்கு செவ்வாயன்று அமைச்சரவை அங்கிகாரமளித்தது.

ஜனாதிபதியின் செயலாளரினால் ஏற்கனவே நியமிக்கப்பட்ட குழு முன்வைத்துள்ள சிபாரிசுகள் பற்றி இந்த அமைச்சரவை உபகுழு ஆராயவுள்ளது.

## மு.கா. தவிசாளராக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் கல்முனை பிரதிமேயர் பதவி வகித்துள்ளதோடு கடைசியாக கட்சியின் மூத்த துணைத்தலைவர் பதவியை வகித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் மூலம் பொதுச் சேவைக்குப் பிரவேசித்த 61 வயதினையுடைய அப்துல் மஜீத் சாய்ந்தமருதைச் சேர்ந்தவராவார். இவர் நிந்தவூர் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத் தலைவராக பணிபுரிந்துள்ளார்.

செவ்வாயன்று இரவு நடைபெற்ற கட்சி உயர்பிடக் கூட்டத்தில் இவர் சுகவீனம் காரணமாக கலந்து கொண்டிருக்கவில்லை.

இதேநேரம் இவர் வகித்த மூத்த துணைத்தலைவர் பதவிக்கு வடமத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ராவுத்தர் நெயினா முஹம்மத் நியமிக்கப்பட்டார்.

கடந்த மாதம் நடைபெற்ற கட்சிப் பேராளர் மாநாட்டில் ஏற்கனவே தவிசாளர் பதவியை வகித்த பஷீர் சேகுதாவூத் நியமிக்கப்படாமையினால் இந்தப் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது.

## தேசிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினருமான விமல்வீரவன்ஸ நேற்றைய தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தேசிய வைத்தியசாலையின் 45 ஆவது இலக்க வாட்டில் சேர்க்கப்பட்டுள்ள இவருக்கு தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதோடு, இவரை பார்வையிட நேற்றைய தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் வருகை தந்திருந்தார்.

பொது சொத்து மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள தனக்கான பிணைமனு தொடர்ச்சியாக நீதிமன்றினால் நிராகரிக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்பினை வெளியிடும்முகமாக கடந்த 21 ஆம் திகதியன்று விமல்வீரவன்ஸ எம்.பி. சிறைச்சாலையில் இருந்தவாறே உண்ணாவிரதத்தில் குதித்தார்.

பல்வேறு தரப்பினரது வலியுறுத்தலையும் மீறி இவர் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவந்தமையால் உடல் நிலை பாதிக்கப்பட்ட அவர் கடந்த ஞாயிறன்று சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதன்போதும், வைத்தியர்களின் அறிவுறுத்தலையும் மீறி உண்ணாவிரதத்தை தொடர்ந்த அவருக்கு சீனி மற்றும் இரத்த அழுத்தத்தின் அளவு அதிகரித்துவிட்டன என்று அவர் சார்ந்தோரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே அவரின் உடல்நிலை நேற்று மேலும் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவரை பார்வையிட அவரது உறவினர்கள் மட்டுமன்றி ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினர்கள், ஏனைய அரசியல் பிரமுகர்கள் என பலரும் வருகைதந்துள்ளனர். மேலும், இவர் தொடர்ந்தும் நீராகாரம் மட்டுமே உட்கொண்டு வருவதால் கதைத்துக்கொள்ளக்கூட முடியாமல் சோர்வாக காணப்படுகிறார் என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சு.க.வின் அடுத்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்சிக்கு வேட்பாளர் இருக்கின்றது. எமது கட்சி அமைப்புக்கள் தீர்மானித்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டிவரும் என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய நேற்றுக் கூறினார்.

முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலே முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பத்தொன்பதாவது திருத்தம் போதுமானது என்பதாகவேதான் கருதுகிறேன்.

எமது கட்சிக்கு 2020 ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளர் இருக்கின்றது. சிலருக்கு ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் இல்லாதுள்ளது. எமது கட்சி அமைப்புக்களில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டிவரும். வடகிழக்கு வாழ் மக்களின் ஆதரவு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருக்கு அவசியமாகின்றது. பௌத்த மக்களின் வாக்குகள் இரண்டாகப்பிரியும் நிலையில் சிறுபான்மையினரின் ஆதரவும் தேவைப்படுகின்றது. என்றார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் போட்டியிடுவது தொடர்பில் அலட்டிக்கொள்ளத் தேவையில்லையென ஊடகவியலாளரின் வினாவொன்றுக்கு பதிலளிக்கையில் மேலும் தெரிவித்தார்.

மதுபான உற்பத்தி நிறுவனமொன்றுக்கு பாரிய வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளதுடன் பியர் தயாரிப்புக்கு நாலாயிரம் மெட்ரிக் தொன் நெல் வழங்கப்பட்டுள்ளமை நல்லாட்சி சிந்தனைக்குள் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்குவோருக்கு இதனைக் கைவிடுமாறு சொல்ல வேண்டும்.

நாட்டில் மாற்றமொன்றை எதிர்பார்த்த மக்களுக்கு தாம் எதிர்பார்த்த அரசியல் கலாசாரம் ஏற்படவில்லை. மக்களுக்கு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிவரும்.

நாட்டின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் உரிய ஏற்பாட்டின் பின்னர் புதிய முறையில் இடம்பெறும். மாகாண சபைத் தேர்தல் முறையில் மாற்றமில்லை. இவ்விடத்தில் பதவிக் காலம் முடியும் மூன்று மாகாண சபைகளின் தேர்தல் பழைய முறையில் இடம்பெறும்.அமைச்சரவை மாற்றம் தொடர்பில் பாரியளவில் குரலெழுப்பப்பட்டுள்ளது. அமைச்சரவையில் மாற்றம் வரும் விமல் வீரவன்சவின் சிறை மற்றும் உண்ணாவிரதம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், பிள்ளைகளின் மனத்தாக்கம் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. நீதிமன்றம் முன்னிலையில் இருக்கும் விடயம் தொடர்பில் கருத்து சொல்ல முடியாது என்றும் தெரிவித்தார்.

## பாலமுனை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பட்ட வெற்றிடத்தையே அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொறுப்பேற்றார்.

பாலமுனைக்கு புதிய அமைப்பாளர் ஒருவரை நியமிக்கும் வரை தானே அமைப்பாளராக இருப்பதாக ஹக்கீம் இக்கூட்டத்தில் அறிவித்தார்.

கட்சி உயர்பீட உறுப்பினர் மற்றும் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளர் பதவிகளிலிருந்து அன்சில் நீக்கப்பட்டார்.

சட்டத்தரணி அன்சில் ஹஸன் அலியுடன் இணைந்து கட்சிக்கு எதிராக செயற்பட்டு வருவதனையடுத்தே கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

## வெற்றிட ஆவணங்கள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியமும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது,

கடந்த சில தினங்களாக கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள் கடும் முயற்சிகளை முன்னெடுத்து ஒன்றரை கிழமைக்குள் 3000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களை உடைய ஆவணங்களை தொகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது,

குறித்த ஆவணங்கள் திறைசேரியிடம் கையளிக்கப்பட முன்னர் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அவற்றை ஆராய்ந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதற்கு முன்னர் கடந்த 14 ஆம் திகதி கிழக்கு முதலமைச்சரின் பங்கேற்புடன் திறைசேரியில் இடம்பெற்ற கூட்டத்தில் கிழக்கின் சகல தரவுகள் அடங்கிய ஆவணங்களை இரண்டு கிழமைக்குள் திறைசேரி மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்குமாறு பிரதமரின் ஆலோசகர் ஆர் பாஸ்கரலிங்கம் பணிப்புரை விடுத்திருந்த நிலையில் ஒன்றரை கிழமைக்குள் இந்த ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன,

கிழக்கு முதலமைச்சர் மீது பட்டதாரிகள் விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில் பட்டதாரிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது,

## நாட்டைப் பிளவு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒற்றுமையாக வாழும் வகையில் நாட்டை அபிவிருத்தி செய்வோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

அத்தோடு, இனவாத ரீதியான கருத்துக்களையும் பதிய அரசமைப்பு தொடர்பிலான விமர்சனங்களை கண்டுகொள்ளாது முன்னோக்கி பயணிப்பதே அரசின் இலக்கு எனவும் அவர் கூறினார்.

மருதானை சுதுவெல்ல பௌத்த விகாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட பிரதமர்,

இங்கு நடைபெற்றுக் கொண்டிக்கும் இந்த நிகழ்விற்கு பௌத்த மதத்தலைவர்கள் மாத்திரமன்றி இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் என சகல மதத் தலைவர்களும் கலந்து கொண்டுள்ளமையே நாட்டில் மதங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை காண்பிக்கின்றது.

இந்த நாட்டில் பெரும்பாலனவர்கள் பௌத்த மதத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அரசமைப்பில் பௌத்தத்துக்கு கொடுக்கப்படும் முன்னுரிமை குறித்து எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

அதேநேலம், புத்தரின் போதனைக்கு இணங்க ஏனைய மதங்களுக்குமான முன்னுரிமையையும் நாம் கொடுக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். வெசாக் போன்ற புனித தினங்களில் இடம்பெறும் அன்ன தான நிகழ்வுகளில் பௌத்தர்கள் மட்டுமன்றி நாட்டிலுள்ள ஏனைய மதத்தவர்களும் உதவிகளை வழங்குகின்றனர். இவ்வாறு ஒற்றுமையுடன் வாழ்ந்து ஏனைய மதங்களையும் பாதுகாக்காவிடின் நாம் உண்மையான இலங்கையர்களே இல்லை.

அதேவேளை மதங்கள் மாத்திரமன்றி இனங்களுக்கிடையேயும் நல்லிணக்கம் என்பது முக்கியமான ஒன்றாகும். இனமத பேதமின்றி செயற்பட வேண்டுமாயின் அரசியல் ரீதியிலான தீர்வொன்று அவசியமாகும்.

இதற்காகவே இவ்விவகாரம் குறித்து பாராளுமன்ற அரசியலமைப்பு பேரவை மற்றும் அரசியலமைப்பு வழிநடத்தல் குழு ஆகியவற்றில் கலந்துரையாடப்படுகின்றது. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் போது நாட்டை பிரிக்காது அதிகாரங்களை எவ்வாறு பகிர்வது என்பது தொடர்பாகவும் தீவிரமாக ஆராய வேண்டும்.

அந்தவகையில், ஒற்றையாட்சியை பலப்படுத்துவதற்காக அதிகாரங்களை பகிர்ந்து ஒவ்வொரு பிரதேசங்களிலும் இருக்கும் மக்கள் தமது பணிகளை தடையின்றி பணி செய்யும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் எமது நோக்கமே ஒழிய, நாட்டைப் பிரிப்பது அல்ல என்பதையும் கூறிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அரசியல் ரீதியிலான பிர்சினைகளை தீர்த்து மத நல்லிணக்கத்துடன் செயற்பட்டால் மட்டுமே எமது நாட்டை வேகமாக முன்னேற்றிச் செல்ல முடியும்;.

அத்தோடு, இவ்விவகாரங்;கள் தொடர்பிலான இனவாத கருத்துக்கள் நியாயமற்றவையாகவே இருக்கின்றன. அரசியல் ரீதியில் வங்குரோத்து நிலையில் இருக்கும் அரசியல்வாதிகளால் வெளியிடும் கருத்துக்களே இவை.

இது போன்ற கருத்துக்கள் தொடர்பாக நாம் கவனம் செலுத்த தேவையில்லை. சகலரும் ஒற்றுமையாக வாழும் சூழலை ஏற்படுத்துவது எவ்வாறு என்று மட்டுமே நாம் சிந்திக்க வேண்டும். நாட்டில் சகலரும் ஒற்றுமையாக பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே நாம் பயணிக்கிறோம். நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது மட்டுமே எமது நோக்கமாகும். அதன்படி நாட்டை பிரிக்காது, அதிகாரங்களை பகிர்ந்தளித்து, முன்னோக்கி செல்வோம். இதற்காக வரும் விமர்சனங்களையெல்லாம் கண்டுகொள்ள தேவையில்லை என்றார்.

## இந்தியாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தின் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் எழுதிய நூல் மிகச் சிறந்தது. அதில் கூறப்பட்டுள்ளது போன்று, காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசாங்கம் சிறிலங்காவுக்கு மிகவும் ஆதரவாக இருந்தது.

ஆனால் பாஜக ஆட்சிக்கு வந்த பின்னர், அஜித் டோவல் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்ட பின்னர், சீனா விவகாரம் முன்னரங்கிற்கு கொண்டு வரப்பட்டது.

சீனாவின் முதலீட்டிலான கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துமாறும், கொழும்பு துறைமுகத்தில் தெற்கு கொள்கலன் முனையத்தை சீனர்களிடம் இருந்து திரும்பப் பெறுமாறும் இரண்டு தடவைகள் அஜித் டோவல் என்னிடம் கூறினார்.

புலனாய்வுச் சேவையில் இருந்த போது, அஜித் டோவல் சீனாவைச் சுற்றியே செயற்பட்டார். சிவ்சங்கர் மேனன் ஒரு இராஜதந்திரியாக செயற்பட்டார். டோவல் ஒரு புலனாய்வாளராகவே செயற்படுகிறார்.

இந்தச் சூழலில், 2014ஆம் ஆண்டு சீனாவின் அணுசக்தி நீர்மூழ்கி கொழும்பு வந்திருப்பதாக இந்திய ஊடகங்கள் பதற்றத்தை உருவாக்கின.

அது ஒரு அணுசக்தி நீர்மூழ்கி அல்ல என்பது முதலாவது விடயம். இரண்டாவது, சீன நீர்மூழ்கியின் பயணம் இரகசியமானது என்பது உண்மையல்ல.

கிழக்கில் இருந்து மேற்கிற்கும், பின்னர் மேற்கில இருந்து கிழக்கிற்குமான கப்பல்களின் பயணங்கள் மற்றும் அதன் பாதைகள் தொடர்பான தகவல்கள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு வழங்கப்பட்டிருந்தன.சிறிலங்கா அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றே இந்தப் பயணங்கள் இடம்பெற்றன.

புதுடெல்லியின் உணர்வுகள் கொழும்புக்குத் தெரியும். இந்தியாவுக்கு எதிராக சிறிலங்காவைப் பயன்படுத்துவதற்கு யாரையும் அனுமதிக்க மாட்டோம் என்று நாம் கூறியிருந்தோம். ஆனால் இந்தியா அதனை நம்பவில்லை.

இப்போதைய சிறிலங்கா அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீத பங்குகளை 99 ஆண்டுகளுக்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்கவுள்ள நிலையில், இந்தியா மௌனம் காப்பது கபடத்தனமானது.

அம்பாந்தோட்டையை சீனாவுக்கு வழங்குவது ஆபத்தானது. இதுகுறித்து இந்தியா அமைதியாக இருப்பது வியப்பாக இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

## வலுக்கிறது..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சுழற்சி முறை உண்ணாவிரதத்தின் ஓர் அங்கமாக நாளை வெள்ளிக்கிழமை பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாது.

முசலிப் பள்ளிவாசல் ஜும்ஆ பிரசங்கம் மற்றும் பிரார்த்தனையுடன் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கட்சி, பேதமின்றி பிரதேச முஸ்லிம்கள் முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்துக்கும் பிரதேச தமிழ் மக்களும் மானசீகமான ஆதரவைத் தெரிவித்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதே வேளை வில்பத்துக்கு வடக்கே மேலுமொரு வனவிலங்கு சரணாலயமொன்றை அமைப்பதற்கான முஸ்தீபுகள் இடம்பெற்றுவருவதாக முசலிப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமது பூர்வீகமான குடியிருப்பு நிலங்களையும் விவசாயக் காணிகளையம் மேய்ச்சல் தரைகளையும், மேட்டு நிலக்காணிகளையும் புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வனபரிபாலன திணைக்களத்துக்கு சொந்தமாக்கப்பட்டதுடன் மாத்திரம் நிறுத்திக்கொள்ளாது அதனை வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கு விடுவிப்பதற்காக திரைமறைவில் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கும் பாதிக்கப்பட்டோர் இந்தத் தகவலை வனபரிபால திணைக்கள அதிகாரிகள் தங்களிடம் நேற்று வெளிப்படுத்தியதகவும் கவலையடைந்தனர்.

புதிய வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்யக்கோரி மறிச்சுக்கட்டியில் இரண்டாவது நாளாகவும் தமது போராட்டத்தையும் எதிர்ப்பையும் முன்னெடுத்துவரும் கரடிக்குழி, பாலைக்குழி, மறிச்சிக்கட்டிப் பிரதேச மக்கள் தமது போராட்டத்துக்கு வலு சேர்க்கும் வகையில் நாடளாவிய ரீதியில் மனிதநேயங்கொண்டவர்கள் உதவ வேண்டுமெனவும் கோரினர். முடியுமானால் தத்தமது பிரதேசங்களிலும் தமது நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை(31) மறிச்சிக்கட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

'எமது போராட்டத்துக்கு வெற்றி கிடைக்காவிட்டால் இலங்கையில் உள்ள அனைத்து வெளிநாட்டு தூதுவலராலயங்களிலும் முறையிடுவோம் மறியல் போராட்டங்களையும் நடத்துவோம். நாங்கள் 26 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளினால் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள்.

சொந்த மண்ணில் இருந்து நாங்கள் விரட்டப்பட்டு இத்தனை வருட காலமாக அகதியாக இருந்த பின்னர் இந்த மண்ணுக்கு மீண்டும் இந்த மண்ணுக்கு வந்து சுவாசிக்க நினைக்கும் போது நாங்கள் உருவாக்கிய அரசே எமக்கு அநீதி இழைத்துள்ளது. எங்கள் விரல்களைக் கொண்டே எமது கண்களை குத்திக் கொண்டோம். புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைளுக்கு நிகரான இன்னுமொரு நடவடிக்கையே தற்போது அரங்கேற்றப்பட்டு வருகிறது.7 என்றும் பாதிக்கப்பட்டோர் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

முசலிப்பிரதேசத்தில் உள்ள விலங்குகளுக்கு காட்டும் கருணையைத் தானும் எங்களுக்கு காட்டுகிறார்கள் இல்லை. ஜெனீவா வரை இந்தக்கொடுமையைக் கொண்டு செல்வதற்கு அரசியல் தலைமைகளும் சமூக ஆர்வலர்களும் உதவ வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## பிள்ளைபேற்றை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் தொகை குறித்து கவலையடைந்த ஸ்பெயின் அரசு, இதற்கான அடிப்படை காரணம் என்ன? என்று ஆய்வு நடத்தியதில் மக்களின் இறப்பு விகிதத்துக்கு ஈடு செய்யும் வகையில் மகப்பேறு நடைபெறாததே இந்த சரிவுக்கு காரணம் என்பது உறுதிபட தெளிவானது.

குறிப்பாக, அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் 18 முதல் 49 வயதுக்குட்பட்ட தம்பதியரிடையிலான குழந்தை பிறப்பு விகிதாச்சாரம் 1.58 ஆக இருக்கும் நிலையில் ஸ்பெயினில் மட்டும் இது வெறும் 1.3 சதவீதமாகவே உள்ளதை அறிந்து அரசு திடுக்கிட்டது. இதேநிலை நீடித்தால், எத்தனை வளங்கள் இருந்தாலும் எதிர்காலத்தில் மக்கள் தொகையில் மிகவும் பலவீனமான நாடாக ஸ்பெயின் மாறிவிடக் கூடும் என்ற எச்சரிக்கை ஆட்சியாளர்களை நிலைகுலைய வைத்தது. இதன் விளைவாக, தம்பதியரிடையே பாலியல் இச்சையை அதிகரிக்கச் செய்யவும் மழலைச் செல்வம் என்பது ஒரு வீட்டுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கும் மிகவும் இன்றியமையாத செல்வம் என்று உணர்த்தும் வகையில் புதிய திட்டங்களை தீட்டி, நாட்டு மக்களிடையே குழந்தை பேற்றை அதிகரிக்கச் செய்யும் வகையில் ஊக்குவிப்பதற்காக இதற்கென தனியான ஒரு அமைச்சரே நியமிக்க பிரதமர் மரியானோ ரஜாய் தீர்மானித்தார்.

குழந்தைகளை பெற்றுகொள்வதற்கு பெண்களை தயார்படுத்த ஒரு ஆணை மந்திரியாக நியமித்தால் பொருத்தமாக அமையாது என்று முடிவெடுத்த பிரதமர், 'செக்ஸ் மந்திரி7 என்று ஒரு புதிய பதவியை ஏற்படுத்தி, எடெல்மிரா பரெய்ரா என்ற பெண்ணை ஸ்பெயின் நாட்டின் செக்ஸ் மந்திரியாக கடந்த மாதம் நியமித்துள்ளார்.

## ஹம்பாந்தோட்டை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் பொருளாதாரத்தை ஒருபோதும் சீர் செய்ய முடியாது என்றும் மாறாக இதனால் நாட்டுக்கு பாரிய பின்விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேறகண்டவாறு குறிப்பிட்டார். இதுவிடயம் தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நாட்டை சூழ்ந்துள்ள கடன் சுமை காரணமாக ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்பனை செய்யும் முயற்சியில் அரசு தீவிரம் காட்டிவருகின்றது. நாட்டின் பொருளாதாரமும் நாளுக்கு நாள் சரிவடைந்து வருகின்றது. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து டொலரின் பெறுமதி அதிகரித்துச் செல்வதால் டொலரில் பெற்றுக் கொண்ட கடனை திருப்தி செலுத்த முடியாத நிலையிலேயே அரசு காணப்படுகின்றது.

மேலும், சுகாதாரம் மற்றும் கல்வித் துறை என மத்திய அரசுக்கு கீழுள்ள சகல விடயங்களும் பாரிய பின்னடைவை நோக்கியே பயணித்துக்கொண்டிருக்கின்றன. மத்திய வங்கியின் ஆளுநர் அண்மையில், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை இவ்வருட இறுதிக்குள் விற்றால் மட்டுமே நாட்டின் கடன்களை அடைக்க முடியும் என்று தெரிவித்திருந்தார். இதேகருத்தைத் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூறியிருந்தார். இவ்வாறு நாட்டை ஆட்சிசெய்த ஒவ்வொரு அரசுகளும் ஏதாவது ஒருவகையில், நாட்டின் பொது சொத்துக்களை விற்பனை செய்வதிலேயே பிரதான பங்களிப்பை செலுத்திவருகின்றன.

ஆனால், இதற்கெல்லாம் நாட்டின் ஆட்சியாளர்களும் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளும் தான் காரணமே ஒழிய ஒருபோதும் பொதுமக்கள் அல்ல என்பதை நாம் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும். சீரான ஒரு திட்டமிடல், இலாபகரமான முதலீடுகள் என்பவை இல்லாத காரணத்தினால் தான் நாடு தற்போது இந்நிலைமையில் உள்ளது.

அந்தவகையில், மைத்திரி- ரணில் அரசினால் கூறப்படும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றால் தான் பொருளாதாரத்தை சீராக்க முடியும் என்ற கருத்தையும் எம்;மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. மாறாக, இந்த ஒப்பந்தத்தில் அரசு கைச்சாத்திடுவதால் நாட்டுக்கு பாரிய பின்விளைவுகள் மட்டும் தான் ஏற்படும். எனவே, இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் முன்னர் அதனை பாராளுமன்றுக்கு சமர்பித்து அங்கீகாரத்தை அரசு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றார். இதன்போது, இந்த ஒப்பந்தமானது ஏற்கனவே அரசு கைச்சாத்திடப்பட்டு விட்டது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன? என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்கு, 2002 ஆம் ஆண்டு புலிகளுடன் காலை 10 மணிக்கு அரசினால் ஒப்பந்தம் போட்டுக்கொள்ளப்பட்டது. அன்றைய தினமே மதியம் ஒரு மணிக்கு இவ்வாறான ஒரு ஒப்பந்தமொன்று போட்டுக்கொள்ளப்பட்டதா? என நாம் பாராளுமன்றில் அப்போது சபாநாயகராக இருந்த லொகுபண்டாரவிடம் வினவியபோது, ஒப்பந்தங்களை பாராளுமன்ற அனுமதியுடன் தான் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் பதிலளித்தார். இவ்வாறு பாராளுமன்றுக்கே தெரியாமல் தான் அந்த ஒப்பந்தமானது அன்று செய்து கொள்ளப்பட்டது. ஒப்பந்தங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பின்பற்றும் கொள்கையும் இதுதான். எவ்வாறாயினும் இன்னும் ஹம்பாந்தோட்டை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என்றுதான் எமக்கு தெரியவந்துள்ளது என்று அநுர எம்.பி. பதிலளித்தார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## முதலிடத்தில் ரொனால்டோ



2016-17ஆம் ஆண்டுகளில் அதிகம் கொடுப்பனவு செலுத்தப்பட்ட சர்வதேச கால்பந்து வீரர்களின் பட்டியலை பிரான்ஸ் ஃபுட்போல் சஞ்சிகை வெளியிட்டுள்ளது. இதன்படி முதலாம் இடத்தில் போர்த்துக்கல் மற்றும் ரியல் மெட்ரிட் கழகம் என்பவற்றின் நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ உள்ளார். அவருக்கு 87.5 மில்லியன் யூரோ கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஆர்ஜென்டினா மற்றும் பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரர் லியோனெல் மெஸ்சி 76.5 மில்லியன் யூரோ கொடுப்பனவுடன் 2ஆம் இடத்தில் உள்ளார். 3ஆம் இடத்தில் பிரேசில் மற்றும் பார்சிலோனா கழக வீரர் நெய்மர் உள்ளதுடன், அவருக்கு 55.5 மில்லியன் யூரோ கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளது.

# 2ஆவது ஜனாதிபதி விளையாட்டு விருதுகள்: மே 19இல் கொழும்பில்





(பீ.எப்.எம் றிஷாட்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுரைக்கமைய, விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவின் ஒத்துழைப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் 2ஆவது தடவையாக நடைபெறவுள்ள ஜனாதிபதி விளையாட்டு விருதுகள் எதிர்வரும் மே மாதம் 19ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விருது வழங்கும் விழாவில் கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வெற்றிகளைப் பெற்று நாட்டிற்குப் பெருமையைத் தேடித்தந்த வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளதுடன், இந் நாட்டின் விளையாட்டுத்துறையில் அளப்பெரிய சேவையாற்றிய விளையாட்டுத்துறை அதிகாரிககளை கௌரவிக்கும் முகமாக வாழ்க்கையில் ஒரு தடவை மாத்திரம் வழங்கப்படுகின்ற ஜனாதிபதி கௌரவ விருதுகளும் அன்றைய தினம் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்படவுள்ளதுடன், இதில் க்ரீடாபிமானி, க்ரீடா கீர்த்தி, க்ரீடா லங்காப்ரதீப, க்ரீடா பூஷன, க்ரீடா ரத்ன, க்ரீடா ப்ரபா ஆகிய சிறப்பு விருதுகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான விருதுகள் மூலம் தற்போது நமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி சாதனைகளைப் படைத்துவரும் வீர, வீராங்கனைகளுக்கு மாத்திரமல்லாமல் பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டுத்துறை வைத்தியர்கள் மற்றும் விஞ்ஞானிகள், கனிஷ்ட வீரர்கள் என பலரையும் ஊக்கப்படுத்த முடியும் என்பதுடன், அவர்களை முழு உலகிற்கும் வெளிக்கொண்டுவந்து ஜொலிக்க வைப்பதே நோக்கமாகும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி விளையாட்டு விருதுகள் தொடர்பாக ஊடகங்களை தெளிவுபடுத்தும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று மாலை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திஸநாயக்க தலைமையில் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்படி, 25 நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 53 ஜனாதிபதி விருதுகள் வழங்கப்படவுள்ளதுடன், கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் நடைபெற்ற தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுக்கொண்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்களை கௌரவிக்கும் பல விருதுகளும் இதில் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் ஆண்டின் சிறந்த சிரேஷ்ட, கனிஷ்ட மற்றும் 16 வயதிற்குட்பட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனை, சிறந்த விளையாட்டு அணி, ஆண்டின் சிறந்த மாற்றுத்திறன் கொண்ட (பரா வீரர்கள்) விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனை, ஆண்டின் சிறந்த பயிற்றுவிப்பாளர், ஆண்டின் சிறந்த விளையாட்டுத்துறை நிர்வாகி, நடுவர்கள், போட்டி தீர்ப்பாளர்களுக்கான விருதுகளும், நாட்டின் விளையாட்டுத்துறை ஊக்கப்படுத்த அனுசரணை வழங்கிய நிறுவனங்களுக்கான விருதுகளும் இதில் அடங்குகின்றன. மேலும், இவ் ஜனாதிபதி விருதுகளில் அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு, ஆண்டின் சிறந்த வெளியீடுகளுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

ஜனாதிபதி விளையாட்டு விருதுகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் விளையாட்டுத்துறை அமைச்சில் அல்லதுwww,presidentialsportsawards.lk இணைத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் இறுதித் திகதி ஏப்ரல் 28 எனவும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

## இலங்கை வீரரிடம் ஐ.சி.சி. விசாரணை



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை டெஸ்ட் அணியில் இடம்பெற்ற வீரர் ஒருவரிடம் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளதாக சர்வதேச கிரிக்கட் சபையின் ஊழல் எதிர்ப்பு குழுவின் உறுப்பினர் லக்ஷ்மன் டி சில்வா உறுதிபடுத்தி உள்ளார்.

அமெரிக்காவில் இருந்து அவருக்கு ஏற்படுத்தப்பட்ட தொலைபேசி அழைப்பு ஒன்று தொடர்பாகவே இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் தோல்வியை அடுத்து இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விசாரணைகள் இன்னும் முடிவுக்கு வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியை பங்களாதேஷ் அணியை வெற்றிபெறச் செய்யும் நோக்கில் திட்டமிட்டு கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஐ.சி.சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அஷ்வினுக்கு ஐ.சி.சி. விருது



2016ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி.,யின் சிறந்த டெஸ்ட் மற்றும் கிரிக்கெட் வீரர் ஆகிய விருதுகளை இந்திய சுழற்பந்து ஜாம்பவான் அஷ்வின் பெற்றுக்கொண்டார். இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் நிறைவடைந்த பிறகு, இதற்கான விருதை இந்திய முன்னாள் தலைவர்களான கபில் தேவ், சுனில் கவாஸ்கர் ஆகியோர் வழங்கினர்.

இதுகுறித்து அஷ்வின் கூறுகையில், ஐ.சி.சி., விருது வெல்ல உதவிய சக வீரர்கள், பயிற்சியாளர்களுக்கு நன்றி. எனது சிறப்பான செயற்பாட்டிட எதிர்வரும் போட்டியிலும் வெளிப்படுத்தி, அணிக்கு உதவ முயற்சிப்பேன் என்றார்.

## ஐ.பி.எல் தொடரில் பிராவோ சந்தேகம்

10ஆவது ஐ.பி.எல் போட்டிகள் எதிர்வரும் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி வீரர் டுவைன் பிராவோ பங்கேற்பது சந்தேகமாக உள்ளது. ஐ.பி.எல் போட்டிகளில் சென்னை அணிக்காக விளையாடிய பிராவோ தற்போது சென்னை அணியின் தடை காரணமாக குஜராத் அணிக்காக விளையாடுகிறார்.

அந்தவகையில் கடந்த டிசம்பர் மாதம் பிக் பேஷ் டி20 தொடரில் மெல்போர்ன் ரேனிகேட்ஸ் அணிக்காக விளையாடிய பிராவோ தொடையின் பின்பகுதியில் காயம் ஏற்பட, தொடரில் இருந்து பாதியில் விலகினார். இந்நிலையில் தற்போது அவரது தொடை பகுதியில் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் கூறியதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அவர் ஐ.பி.எல் தொடரின் முதல் கட்ட போட்டிகளில் பங்கேற்க மாட்டார் எனத் தெரிகிறது. குஜராத் அணிக்காக விளையாடி பல வெற்றிக்கு வழியமைத்து கொடுத்த பிராவோ இம்முறை இல்லாதது, இந்த அணிக்கு இழப்பு தான்.



## நடுவரை அவமதித்த மெஸ்சிக்குத் தடை



நான்கு போட்டிகளில் விளையாட ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரர் லயொனல் மெஸ்சிக்கு சர்வதேச கால்பந்து சங்கத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கால்பந்து தொடர் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச்சுற்று போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றதுடன், இதில் ஆர்ஜென்டினா அணி, சிலியை வென்றது. இப்போட்டியின் போது மெஸ்சி, 29, எதிரணி வீரரை பவுல் செய்ததாக, எல்லைக் கோட்டு நடுவர் எமர்சன் கார்வல்கோ தெரிவித்தார். அப்போது அவருக்கு எதிராக மெஸ்சி தகாத வார்த்தைகளால் பேசியுள்ளதுடன், போட்டி முடிந்த பிறகு அவருடன் கைகுலுக்க மறுத்தார். இதுகுறித்து போட்டி நடுவர் சாண்ட்ரோ ரிச்சி (பிரேசில்) கூறுகையில், மெஸ்சி அல்லது வேறு யாரும் தகாத வார்த்தைகள் பேசியதாக எனக்கு கேட்கவில்லை. வழக்கமாக வீரர்கள் கைகளை உயர்த்தி காட்டும் எதிர்ப்பைத் தான் பதிவு செய்தார். ஒருவேளை ஏதாவது அப்படி கேட்டிருந்தால், விதிப்படி நானே நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றார்.

ஆனால், இதுகுறித்து விசாரித்த சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா), அடுத்த நான்கு உலகக் கிண்ண தகுதிச்சுற்று போட்டிகளில், மெஸ்சி பங்கேற்க தடை விதித்தது. தென் அமெரிக்க நாடுகளுக்கான தகுதிச்சுற்றில், ஆர்ஜென்டினா அணி இன்னும் ஐந்து தகுதிச்சுற்று போட்டிகளில் பங்கேற்க உள்ளது. இதில் உருகுவே, வெனிசுவேலா மற்றும் பேரு ஆகிய நாடுகளுடனான போட்டிகளில் மெஸ்சி பங்கேற்க முடியாது. இதுதவிர, இவ்விடயத்தில் மெஸ்சிக்கு ரூ. 6.6 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்நிலையில் பொலிவியா அணியுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் 2க்கு 1 என்ற கோல்கள் அடிப்படையில் ஆர்ஜென்டினா தோல்வியைத் தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் - இந்திய தொடர்: மத்திய அரசுக்கு பிசிசிஐ கடிதம்



இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் நிலவிவருகின்ற எல்லை பாதுகாப்பு மற்றும் அரசியல் முரண்பாடு காரணமாக கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து நடைபெறாமல் உள்ள இருதரப்பு கிரிக்கெட் தொடரொன்றை நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும், இந்திய மத்திய அரசு இதற்கு அனுமதியளிக்கவில்லை. இந்நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் வேண்டுகோளுக்கிணங்க இவ்வருட இறுதியில் டுபாயில் இருதரப்பு கிரிக்கெட் தொடரொன்றை நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், இதற்கான அனுதியைப் பெற்றுக்கொள்ள இந்திய உள்துறை அமைச்சுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இதன்படி எதிர்வரும் டிசம்பர் மாதம் இடம்பெறவுள்ள இந்திய அணியின் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்துக்கு முன்னர் பாகிஸ்தானுடன் இப்போட்டித் தொடரை நடத்தவும், எதிர்வரும் செப்டெம்பர் அல்லது நவம்பர் மாதமளவில் டுபாயில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 2 டி20 போட்டிகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மழையால் கைநழுவிய

## குசலின் கன்னிச் சதமும் தஸ்கினின் ஹெட்ரிக் விக்கெட்டும்



தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான தீர்மானம் மிக்க இரண்டாவது ஒருநாள் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக கைவிடப்பட்டது.

இலங்கை மண்ணில் இதுவரை நடைபெற்றுள்ள பங்களாதேஷ் அணியுடனான ஒருநாள் போட்டிகளிலேனும் தோல்வியுற்றிராத நிலையில், கடந்த போட்டியில் ஏற்பட்ட அதிர்ச்சி தோல்வியினால், தொடரை தக்க வைக்க கட்டாயம் இந்த போட்டியில் வெற்றி பெற வேண்டிய நிலையில் இலங்கை அணி களமிறங்கியது.

இலங்கை அணித் தலைவர் உபுல் தரங்க தனது 200ஆவது ஒருநாள் போட்டிக்காக களமிறங்கினார். துடுப்பாட்டத்துக்கு உகந்த இந்த மைதானத்தில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற உபுல் தரங்க முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். குசல் மென்டிஸ் மற்றும் அணித் தலைவர் உபுல் தரங்க ஆகியோர் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய அதே நேரம் இரண்டாம் விக்கெட்டுக்காக 111 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று அணியை வலுவான நிலைக்கு மீட்டனர். சிறப்பாக துடுப்பாடிய அணித்தலைவர் உபுல் தரங்க தனது 31ஆவது அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார். அத்துடன் 9 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் உள்ளடங்கலாக 102 ஓட்டங்களை விளாசி தனது கன்னிச் சதத்தை பூர்த்தி செய்தார். இலங்கை அ[illegible]ர்பாக கடந்த 5 போட்டிகளில் குறைவான ஓட்டத்தைப் பதிவு செய்த 22 வயதான குசல், ஒருநாள் போட்டியொன்றில் இலங்கை சார்பாக குறைந்த வயதில் சதம் அடித்த நான்காவது வீரராகவும் மாறினார். எனினும், அதனையடுத்து சீரான இடைவெளிகளில் பின்கள வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததால் இலங்கை அணி 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 311 ஓட்டங்களைப் பதிவு செய்தது.

அதேநேரம் பங்களாதேஷ் அணி சார்பாக சிறப்பாக பந்துவீசிய 21 வயதான தஸ்கின் அஹமட் போட்டியின் இறுதி நேரத்தின் போது தொடர்ச்சியாக மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தி ஹெட்ரிக்கை பதிவு செய்தார். இதன்படி பங்களாதேஷ் அணி சார்பாக ஹெட்ரிக் விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய 5ஆவது வீரராக வரலாற்றில் இடம்பெற்றார். முன்னதாக சிம்பாப்வே அணிக்கெதிராக 2006இல் சஹாதத் ஹொசைனும், 2010இல் அப்துல் ரஸாக்கும், நியூசிலாந்து அணிக்கெதிராக 2013இல் ருபெல் ஹொசைனும், சிம்பாப்வே அணிக்கெதிராக 2014இல் தஜிஉல் இஸ்லாமும் இவ்வாறு ஹெட்ரிக் விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், பங்களாதேஷ் அணி களமிறங்க வேண்டிய நிலையில் மழை குறுக்கிட்டதால் போட்டி தடைப்பட்டது. அதனை தொடர்ந்து சில மணி நேரத்துக்கு பின்னர் மைதானம் போட்டியை முன்னெடுத்து செல்வதற்கு உகந்த நிலையில் இல்லாத காரணத்தால் போட்டி கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மூன்றவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

2018 உலகக்கிண்ண கால்பந்து:

## பரகுவேயிடம் வென்று பிரேசில் முதல் தகுதி



பரகுவே அணிக்கு எதிரான உலகக்கிண்ண கால்பந்து தகுதிச் சுற்றுப் போட்டியில் நெய்மர், மார்சிலோ மற்றும் பிலிப்பே கௌடின்ஹோ ஆகியோரின் கோல்களினால், பிரேசில் அணி 3-0 என வெற்றி பெற்று தென் அமெரிக்க நாடுகளில் 2018 உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் முதல் அணியாக தகுதி பெற்றது. ரஷ்யாவில், அடுத்த வருடம் (ஜூன் 14 - ஜூலை 15) 21ஆவது பிபா உலகக்கிண்ண கால்பந்து தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறன .

பிரேசிலில் நடைபெற்ற தென்அமெரிக்க அணிகளுக்கான தகுதிச் சுற்றில் பிரேசில், பரகுவே அணிகள் நேற்றுமுன்தினம் இரவு மோதின. அபாரமாக விளையாடிய போர்த்துக்கல் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் பிலிப்பே கௌடின்ஹோ (35ஆவது நிமிடம்), நெய்மர் (64ஆவது) மற்றும் மார்சிலோ(86ஆவது நிமிடம்) கோல் அடித்தனர். இதன்மூலம் 5 முறை உலகக்கிண்ண கால்பந்து சம்பியன் பட்டத்தை வென்ற பிரேசில் அணி உலகக்கிண்ண போட்டிகளுக்கு தகுதிபெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பிரேசில் அணி, இதுவரை விளையாடிய 14 போட்டியில் 10 வெற்றி, ஒரு தோல்வி மற்றும் 3 சமநிலை என 33 புள்ளிகளுடன் முதலாவது இடத்தில் உள்ளது. 2ஆவது இடத்தில் கொலம்பியா அணியும் (24 புள்ளிகள்), 3ஆவது இடத்தில் உருகுவேயும்(23 புள்ளிகள்) உள்ளன.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 30TH MARCH 2017